12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 | இதழ்
21—1—1979 | —17

தில்லையில் மாணவச் சீயம் இராசேந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டதும், மாணவமணி மாயூரம் சாரங்க பாணி தன்னை நெருப்பில் சுட்டுக் கொண்டதும் அந்த மொழிப் புரட்சியின்போதுதானே!

தீக்குளித்து மாண்ட தீரர்களின் கல்லறைகள் இருக்கும் திக்குநோக்கி வணங்குகிருேமே — அந்தத் தியாகிகளைக் களங்கப்படுத்தி அன்றைய ஆளவந்தார் பேசியதை நாடு மறந்திடுமோ?

களஞ் சென்ருர் காலடிகட்கு!

உடன்பிறப்பே,

ஜனவரி 25 - மொழிப் புரட்சி நாள்.

மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புத் தீயை அணைக்க முடியாமல், தமிழகத்தையே அன்றைய ஆளவந்தார் பிணக்காடாக ஆக்கத் துடித்த நாள்!

மாணவர்களை அடக்குவதிலும் தமிழ் மக்களின் உணர்வுகளைப் பொசுக்குவதிலும் — அடக்கு முறையைக் கோர நர்த்தனமாடச்செய்வதிலும் - துப்பாக்கிக் குண்டு களை மழையாகப் பொழியச் செய்து, குருதி ஆற்றில் தமிழ் வாலிபர்களின் தேக்கு மரத் தேகங்களைத்தெப்பம்

கலைஞர் கடிதம்

போல் மிதக்கச் செய்வதிலும் பக்தவத்சலனார், எதற்கும் அசையாத மலைப்பாறை போல இருந்தார்' என்ற பாராட்டை, மத்திய அரசிடமிருந்து பெற்ற நேரமும் அந்த நேரம்தான்!

"கொம்புத் தேனும் தமிழ்மொழி எமக்கிருக்க— கொட்டும் தேளாம் இந்தி மொழிக்கு எதற்காக ஆதிக்கம்?

எனக் கேட்டுத் தங்கள் பொன்னவிர் மேனியைத் தீக் குளத்தில் குளிப்பாட்டி உயிர் நீத்த தியாகச் செம்மல் கள், உலகிற்குத் தமிழர்களின் மொழிப்பற்றை முர சொலித்துக் காட்டிய வரலாற்றுப் புகழ்மிக்க நேர மன்ருே, அந்த நேரம்!

இந்தி ஆதிக்கம் பரவிட எடுக்கப்பட்ட முயற்சி களை எதிர்த்து அறிஞர் அண்ணு போர்க்குரல் கொடுத் தார்; ஏன் - தமிழகமே போர்க்கோலம் பூண்டது.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

களஞ்சென்ருர் காலடிகட்கு

(முதற்பக்கத் தொடர்ச்சி)

நமது வெறுப்பைக் காட்டிட 'அவரவர்கள் இல்லத்தில் கறுப்புக்கொடி பறக்கட்டும்' எனக் கழகம் அறிவித்தது.

''தங்கள் சொந்த வீடுகளில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டால் போதுமானது — பொது இடங்களில் தேவையில்லை'' என்று அறிஞர் அண்ணு திட்டவட்டமாகத் தெரிவித்தார் !

அண்ணனின் ஆணைக்கேற்ப உண்மைத் தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் உயர்ந்தது — கறுப்புக் கொடி!

'உடல் மண்ணுக்கு — உயிர் தமிழுக்கு' என்று உறுதி முழக்கம் செய்த உத்தமத் தமிழர்கள், தங்கள் வீட்டு முகப்புக்களில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஏற்றினர் — கறுப்புக்கொடி

இந்தி வெறியின் மீது தங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்ள — தங்கள் சொந்த வீடுகளில் கறுப்புக் கொடி கட்டிக்கொண்டதைத் தமிழ் உணர்வு அற்ற கயவர்கள் — கொடியவர்கள் இனத் துரோகிகள் எதிர்த்தனர்.

கறுப்புக் கொடி பறந்த இல்லங்களில் களம் அமைத்தனர் - அதனை, அந்நாள் காவல்துறையினர் வேடிக்கை பார்த்தனர்:

அண்ணு வீட்டில் ஏற்றியிருந்த கறுப்புக்கொடியைக் கழகத்தலைவர் இல்லங்கள், கழக அலுவலகங்கள் ஆகியவற்றில் ஏற்றியிருந்த கறுப்புக் கொடிகளை-காவல்துறையின் துணையோடு - கயவர்கள் வீழ்த்தினர்!

சில இடங்களில், மோதல் — கலவரம் — அமளி!

கழகக் கண்மணிகள் ஆயிரம் ஆயிரமாகக் கைது செய்யப்பட்டனர்!

அரசியல் சட்டத்துக்குத் தீயிட்டு — தமிழகத்தின் இந்தி எதிர்ப்புக் குரலை எட்டுத் திக்கும் எதிரொலித்த அடலேறுகள், சறைக் கோட்டத்தில் அடைபட்டுக் கிடந்தனர்!

பாதுகாப்புச் சட்டங்கள் — பாளையங்கோட்டைகள் — கழகத்தின் மீது பயங்கரப் பாய்ச்சல் நடத்தியதும் அப்போதுதான்!

குமுறும் எரிமலையாகக் — கொழுந்துவிட்டு எரியும் அனற்காடாகத் தமிழகம் காட்சியளித்தது — குளிர் பொழியும் 'கோவா' கடற்கரையாக அல்ல!

'செந்தமிழுக்குத் தீமை
வந்த பின்னும் — இந்தத்
தேகம் இருந்தோரு லாபம் உண்டோ?"

என்ற எழுச்சிமிகு கேள்வி எங்கணும் கேட்டது!

துப்பாக்கி ரவைகளை மலர்களாக ஏற்றுக் கொண்டு, மானங் காக்கும் சீமையினர் மரண மஞ்சத்தில் துயில் கொண்டனர்!

தீப்பிழம்புக்கும் — தென்றலுக்கும் வேறுபாடு தெரியாமல் கனலில் களிநடனம் ஆடி — 'தமிழ் வாழ்க' என இசைபாடி — சாவு மங்கையைத் தழுவினர் மறவர் குலச் சிங்கங்கள்!

''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை''

என்ற புரட்சிக் கீதம், தமிழர்களின் உதட்டில் — உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டது!

ஆகா! அந்தத் தமிழ் உணர்வை எண்ணிக்கொண்டாலே, இனிக்கிறது நெஞ்சம்!

அந்தக் களத்தில் உயிர் நீத்தவர்க்கு நமது வீர வணக்கம்!

அடிபட்டோர் - அடக்குமுறைக்கு ஆட்பட்டோர் இன்று எங்கு இருப்பினும், அந்தத் தியாகச் சீலர்களின் திருக்கரங்களுக்கு நமது அன்பு முத்தம்!

அன்னை மொழி காக்க, ஆதிக்க இந்தியை எதிர்க்க - அன்று களம் சென்ருர் காலடிகட்கு, தமது தலை தாழ்ந்த மரியாதை இந்நாளில் உரியதாகட்டும்!

அன்புள்ள

மலர்களை வாழவைப்போம்!

தலைவாரி பூச்சூடி உன்னை-பாட
சாலைக்குப் போவென்று சொன்னுள் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்ருய்? — நீ
சிந்தாத கண்ணீரை ஏன சிந்துகின்ருய்?
— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

— இந்த ஆண்டை (1979) குழந்தைகள் ஆண்டாக உலக நாடுகள் அனைத்தும் கொண்டாடப் போகின்றன.

குழந்தைகள் ஆண்டை உலகத்தோடு சேர்ந்து கொண்டாடுவதில் பங்கேற்கப் போகும் நாம், இந்தியக் குழந்தைகளின் இன்லறைய நிலை — எதிர்கால வாழ்க்கை குறித்து சற்றேனும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிருேம்.

குழந்தைகளை மலர்களென்று புதுச் சமுதாயம் காணத் துடித்த ஜவகர்லால் நேரு ஆசையோடு கூறினர். ஆனல் —

இந்திய மண்ணில் எத்தனையோ மலர்கள்' போதிய உணவின்றி மொட்டிலேயே கருகி விடுகின்றன எத்தனையோ 'மலர்கள்' சரியான வளர்ப்பு முறை இன்றி எதிர்காலத்தில் சட்டம் ஒழுங்கைத் தூக்கி யெறிந்து சமுதாயத்தை உறுத்தும் முட்களாக மாறி விடுகின்றன.

இந்நாட்டை ஆளப் போகும் எதிர்காலமன்னர்கள் தாயின் கர்ப்பப் பையினுள் இருக்கும்போது போதிய ஊட்ட சத்தைப் பெருமல், இம்மண்ணிற்கு சூம்பிய கை கால்களோடும், சோகை பிடித்த உடலோடும் குழந்தைகளுக்குரிய எழிலையும், வளப்பத்தையும் இழந்தே வருகின்றன.

இந்திய மக்களில் சரிபாதியினருக்கு மேல் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகிருர்கள்: அவர்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகள் எப்படி இருப்பார்கள்? எதிர் காலத்தில் எத்தன்மையினராக உருவாகுவார்கள்?

தொடக்கப் பள்ளி சென்று பயில வேண்டிய ஆறு, ஏழு வயதுக் குழந்தைகள் கூட, பெற்ருேரின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்காக வேலை செய்யும் பரிதாபகரமான நிலைமைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

வறுமையில் வாடும் இல்லங்களில் பிறக்கும் குழந்தைகளை வியாதியால் அவதியுறும் குழந்தைகளை, பட்டினித் தீயில் கருகி மாயும் குழந்தைகளைப் பராமரிக்கும் டொறுப்பில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

எத்தனையோ குழந்தைகள் குப்பையில் கிடக்கும் மாணிக்கங்களாகக் கவனிப்பாரற்று உள்ளன; அக்குழந்தைகளின் திறன்களைக் கண்டறிந்து புத்துலகம் படைக்கும் சிற்பிகளாக அவர்களை உருவாக்கி விடும் பணியில் அரசு அக்கறை செலுத்த வேண்டும்.

குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடும் இந்த ஆண்டில் அரசிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது:

ஏழைக் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களைக் குறைந்த விலைக்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டும்; குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவோரை இன்னும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்; அனுதைக் குழந்தைகளை, ஆதரவற்ற குழந்தைகளை, உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்: குழந்தைகளுக்கான மருத்துவ விடுதிகளைப் பெருக்கி, வியாதிகளால் ஏற்படும் மரணத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டும்.

எந்த ஒரு குழந்தையும் இம்மண்ணில் பிறந்தது குறித்து வளர்ந்து வாலிபம் அடையும்போது வருந்தாமல் இருக்கும் ஒரு காலகட்டத்தை உருவாக்குவோமாக!

— சாலு

வந்த மடல்

தமிழ் முதறிஞரை மறந்ததேனே?

ஐயா.

தமிழ் கூறும் நல்லுலகில் 82 வயதைக் கடந்து 83-ஆம் வயதில் பீடுநடைபோட்டு வாழ்ந்து வருபவர் மகான்த்துவான், சிந்தாமணிச் செல்வர், இலக்கணத் தாத்தா என்று போற்றப்படும் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள். தொல்காப்பியப் பதிப்பாசிரியர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர், அரசினர் பாட நூல் குழுக்களில் அங்கம்வகித்தவர், பல ஆங்கில அறிஞர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் இரண்டாம் பதிப்பின் ஆய்வுக்குழு உறுப்பினர். நூல் இல்லாது தொல்காப்பியம் பாடம் சொல்லக்கூடியவர். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அங்கம் வகித்தவர் நூற்றுக் கணக்கானவர் அவரை நாடித்தமிழ் இலவசமாகக் கற்றுப் புலவர்களாயினர். பல பேராசிரியர்கள் நூல்களைப்பதிப்பித்தனர். கம்பராமாயணப் பதிப்பாசிரியராய் இருந்தவர். பதிப்புத் துறை வித்தகர். பேராசிரியர் கா.நமச்சிவாயர் அவர்களுடன் இருந்து திருக்குறள் திருநாட் கழகம் கண்ட மேலோன். நமச்சிவாயர் கண்ட தமிழ்த் திருநாளினை உடனிருந்துநடத்திய நாட்டாண்மைக்காரர்.

இத்தகையதொரு தமிழறிஞருக்கு அரசு விருது வழங்காமல் புறக்கணித்தது ஏனோ?

'தமிழ்த்தொண்டன்'
சென்னை 600081.

★★★★★ ★★ ★★★

ஆங்கிலம் அந்நிய மொழியா?

பொருந்தாத வாதம்

ஆங்கிலம் தொடர்ந்து நடுவணரசின் மொழியாக இருக்கக்கூடாது என்பதற்கு இந்திவெறியர்கள் கூறும்கூற்று ஆங்கிலம் அந்நியமொழிஎன்பதாகும். ஆங்கிலம் தொடர்ந்து மத்திய அரசின் மொழியாக இருப்பது தாய்த்திருநாட்டின் கௌரவத்தையும், மதிப்பினையும் உலக அரங்கில் குறைக்கும். ஆகவே ஆங்கிலத்தை அகற்றவேண்டும் என்று கூக்குரல் இடுகின்றனர். இவ்வாறு நீண்டகாலம் கூக்குரல் இட்டவர்கள் டாக்டர் லோகியா, ராஜ்நாராயண் சேத்கோவிந்ததாஸ் மற்றும் சனசங்கக்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவார். வெகுகாலமாக ஆட்சிமொழிப் பிரச்சினையிலே எந்தக் கருத்தையும் கூறாமல் இருந்து வந்த மத்திய இராணுவ அமைச்சர் சகசீவன்ராம் அண்மைக்காலமாக தன்னுடைய 'உயர்ந்த' கருத்துக்களை 'திருவாய் மலர்ந்தருளியுள்ளார்' இந்தியின் ஆதிக்கத்தை எதிர்ப்போர் அரசியலில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவேண்டும் என்ற உள்நோக்கத்தோடுதான் எதிர்க்கின்றனர் என்று செப்பியுள்ளார். மேலும் முதலிலே ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமாம். அதற்கு அவர் எடுத்துக்காட்டும் காரணம் ஆங்கிலம் அந்நியமொழி என்பது ஆகும்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சகசீவன்ராம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா டாக்டர் கலைஞர் ஆகியோரின் அடிப்படைக்கொள்கை தாழ்த்தப்பட்டோர் மேல்நிலை அடையவேண்டும் என்பதாகும். அந்தக்கொள்கையின் அடிப்படையில் தி. மு. கழகம் குறிப்பாகவும். தென்னகம் பொதுவாகவும் சகசீவன்ராமுக்குத் தன்னுடைய நல்லெண்ணத்தையும், நல்லாதரவையும் நல்கி வந்தது. ஆனால் இப்பொழுதுதான் அது பசுத்தோல் போர்த்தபுலி, சிறுத்தையால் தன்னுடைய புள்ளிகளை மாற்றிக்கொள்ள முடியவில்லை என்பதுதெளிவாகியுள்ளது. இவ்வாறு ஆங்கிலத்தை எதிர்த்துப்போர் தொடுபோர்கள் உண்மையிலேயே ஆங்கில விரோதிகளா என்று ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் ஆங்கில எதிர்ப்பு நடிப்பே தவிர வேறொன்றும் இல்லை. இவ்வாறு ஆங்கிலம் அந்நியமொழி அது அறவே கூடாது என்று செப்பித்திரிவோர் தங்களுடைய செல்வங்களை ஆங்கிலப் பள்ளிகளிலே படிக்கவைப்பதைக்கண்கூடாகக் காணலாம். அவர்களுடைய உண்மையான உள்நோக்கம் என்னவென்றால் ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் அந்த இடத்தை இந்தி பிடித்துக் கொள்ளும். தாங்கள் ஆளும் வர்க்கமாக, உயர்குடியினராக உலா வரலாம் என்ற எண்ணத்தைத்தவிரவேறொன்றும் இல்லை. ஆங்கிலத்தை நீக்கி விட்டால் வேறு 14 தேசிய மொழிகளும் அந்த இடத்தை எளிதில் பிடிக்க முடியாது. இந்தி ஆதிக்கம் செலுத்தும் என்ற எண்ணத்தோடு கூறப்படும் கூற்றேயாகும்.

இந்தி ஆட்சிமொழியாக வேண்டும், அரியணையில் ஏற வேண்டும், மற்றதேசியமொழிகள் அடிமை மொழிகளாக இருக்கவேண்டும் என்பதிலே பிடிவாதமான கருத்தைக் கொண்டவர்தலைமை அமைச்சர் மொரார்ஜிதேசாய்ஆவார். அவர் உத்திரவு போடும் உத்திரப்பிரதேச மாநிலத்திற்குத் தெற்கே உள்ள குசராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். ஆகவே அவருக்கு தென்னகத்து மக்கள் தங்கள் நல்லெண்ணத்தை வழங்கலாம் என்று எண்ணினால் அவருடைய மொழிக் கொள்கை என்னை ஆதரிக்காதீர்கள்என்று விரட்டி அடிப்பதாக உள்ளது. இந்த மாமேதை நாட்டுப்பற்று கட்டாயம் இந்தியை ஏற்றுக் கொள்ளச் செய்யும் என்று கூறுகிறார். அவர் இந்தியைஎதிர்ப்பவர்களைமிரட்ட கையாளும் ஆயுதம் இந்தி எதிர்ப்பாளர்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள் என்ப

இரா. இராசு
பி. ஏ. பி. எல்.

தாகும். அவருடைய கூற்றின்படி இந்தியை ஏற்றுக்கொள்பவர்கள் மாத்திரமே நாட்டுப்பற்று மிக்கவர்கள், மற்றவர்களின் நாட்டுப்பற்றிலே மாற்றுக் குறைவு இருக்கிறதுஎன்பதேயாகும். இந்தக் கூற்று வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். இந்தப் பாரதத் திருநாட்டை அந்நியனின் அடிமைப்பிடியிலே இருந்து விடுவித்தவர்கள் பலர் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள். நெல்லைச் சீமையிலே செக்கிழுத்து, சிறையிலே வாடி, கப்பலோட்டினானே தமிழன்சிதம்பரம்அவனுடைய நாட்டுப் பற்றிலே மொரார்ஜி சந்தேகப்படுகிறாரா? வெள்ளைக்காரன் "ஆஷை" மணியாச்சியிலேசுட்டுவீழ்த்தினானே வீரன் வாஞ்சிநாதன் அவன் இந்திரக்காரனா? லோன் என்ற வெள்ளைக்காரனை சுதந்திர வேட்கையின் காரணமாக எமலோகத்திற்கு அனுப்பினானே, தூக்குமேடைஇராசகோபாலை அவன் என்ன இந்திக்காரனா? இவையெல்லாம் அறியாதவர் அல்ல இந்த சனதாக் கட்சிக்காரர். இவ்வாறு மிரட்டிஇந்தி எதிர்ப்பின் வேகத்தைத் திசை திருப்பிவிடலாம் என்றுதப்புக் கணக்குப் போடுகிறார்.

ஆங்கிலம் அந்நிய மொழியா அல்லது இந்திய மொழியா என்ற வழக்கு ஒன்று 1954 ம் ஆண்டு பம்பாய் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கில் அன்று அம்மன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த எம். சி. சாக்ளா. அவர்களும் அவர்களோடு இருந்து தீர்ப்பு வழங்கிய மற்றொரு நீதிபதியும். ஆங்கிலமும் ஒரு இந்திய மொழியே என்று தீர்ப்பு வழங்கியுள்ளனர். அவ்வாறு அவர்கள் தீர்ப்பு வழங்குகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8 வது தனிப்பிரிவில் கூறப்பட்டுள்ள 15 மொழிகள் மாத்திரமே இந்திய மொழிகள் என்று ஆகிவிட்டால் "கொங்கணி" மொழி அவ்வாறு 8வது அட்டவணையில் இடம் பெறவில்லை ஆகவே அதனை இந்தியமொழி அல்ல என்று கூறிவிட முடியுமா? என்று வினாத் தொடுக்கின்றனர். மேலும் இந்தியாவில் பரம்பரையாக வாழும் ஆங்கிலோ—இந்தியரின் தாய் மொழி ஆங்கிலமாகும். அவர்களுக்கு அனைத்துக் குடியுரிமையும் வழங்கி நாடாளுமன்றத்திலே இரண்டு நியமன உறுப்பினர்களையும், ஒவ்வொருசட்டமன்றத்திலும், ஒரு நியமன உறுப்பினரையும் ஏற்படுத்தியிருக்கும் பொழுது, அவர்களுடைய மொழியை எவ்வாறு அந்நிய மொழி என்று செப்பிட இயலும்?

ஆங்கிலம் அந்நிய மொழி என்ற உண்மைக்குப்புறம்பான வாதத்தை தவிடுபொடியாக்க ஆங்கிலத்தையும் 8 வது தனிப்பிரிவில் 16 வது தேசியமொழியாகச் சேர்க்க முயற்சி எடுக்கப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதற்காக இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

ஆங்கிலம் அந்நிய மொழி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

வையம்சிரிக்கும்!

★ -:தமிழ்த்தம்பி:- ★

தந்தை:— அப்பா மகனே அருமைப் பாண்டியனே
எப்படிக் கற்கின்றாய்? இந்தி படிக் கின்றாயோ?

மகன்:— தந்தையே! தாய்மொழி கற்பதோடு
தருமொழி ஆங்கிலமும் கற்கின்றேன்; ஆனாலும்...

தந்தை:- இந்தி படிக்கவில்லை, என்னடா செய்திடுவாய்?
சந்தியிலே நிற்கத் தகுங்காலம் வந்ததுவோ?

மகன்:- தந்தையே என்னதெரிந்து இங்ஙனம் பேசுகின் றீர்?
சந்தியிலே நிற்பதற்குத் தாய்மொழி தான் காரணமோ?

தந்தை:- ஆமாண்டா ஐயமோ! ஆட்சிக்கு வந்திருப்போர்
சாமானிய மாந்தர்களோ? அன்னார்க்குப்பின் ஏது உரை?

மகன்:- விந்தை மொழியை விளம்புகின்றீர் தந்தையே
சொந்தமொழி மறந்து இந்திமொழி கற்றிட்டால்
வந்துவிடும் வாழ்வென்று வக்கணைகள் பேசுகின்றீர்
ஆட்சிக்கு வந்திருப்போர் அன்றாடம் காய்ச்சிகளின்
காட்சியைப் பார்ப்பதற்கும் கண் றவார்! அன்னாரின்
மாட்சிமை யப்படி! மன்றிலவர் கூறிவரும்
பேச்செல்லாம் சட்டமெனின் பேதைகளும் வாளெடுப்பர்
ஏய்த்துப் பிழைக்கின்ற எத்தரெல்லாம் மந்திரிடோ?
ஆச்சா! ஒருக்கை அவர்களையும் பார்க்கின்றேன்
என்றே இரைந்து எழுந்திடுவான் போர்த்தொடுக்க
வென்றே திருப்பிடுவான்! வெற்றிப்போர் சட்டிடுவான்!
காட்சிக்கெளியரெலாம் கண்திறந்து பார்த்து விட்டால்
ஆட்சி பறக்காதோ? ஐயம் இதிலுண்டோ?

தந்தை:- ஆள்மாறி ஆட்சி நடத்திடினும் இந்திமொழி
தானூன்றி நிற்கத் தடையேதும் உண்டாமோ?
ஆட்சிமொழி இந்தி—அதைவிடுத்து. ஏதேதோ
காட்டி இழிவழக் கா கின்றாய் ஏற்கவோ?

மகன்:- இப்படிச் சொன்னவர்கள் எத்தனையோ பேர்களுண்டு.
செப்பிடு வித்தையெல்லாம் செல்லுபடி ஆய்விடுமோ?
கொத்தடிமை யாக்குதற்குக் கொண்டுவந்த சட்டத்தைப்
பிய்த்தெறிய வேண்டாவோ? பேணி வளர்த்திட்டால்
சத்தற்ற மாந்தரெனச் சந்ததிகள் தூற்றாரோ?
ஒத்த உரிமை ஒரு காரர்க் கென்றிட்டால்
மொத்தத்தில் நாமெல்லாம் மொய்ம்பிக ளாய் விடுவோம்
ஆட்சி அதற்கென்றால் ஆன்ற நெறியென்றால்
வீழ்ச்சி நமக்கென்றேன் யான்.

தந்தை:- வீழ்ச்சி நமக்கென்று விள்ளாதே வேறொருவர்
ஆட்சிக்கு நாமடிமை ஆகிடுவோம் என்றிட்டால்
இந்தி நமக்கெதற்கு? இன்னொருவன் வாய்மொழியால்
வந்தது வாழ்வென்றால் வையம் சிரிக்குமடா!
சிந்தனை இன்றியான் செப்பிவிட்டேன், நம்பிடுக
இந்தியே வேண்டா மிழிவு.

பொங்கல் வாழ்த்து அனுப்பிவைத்த
அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றி!

அரசு காஸ்டிங் ஒர்க்ஸ்

4/7 தாண்டவராய கிராமணி தெரு
சென்னை—8.

தொலைபேசி: 553256

வெந்தணலாக எரிகிறது

''இந்திதான் ஆட்சி மொழி, இதை நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதிலேதான் பாடங்கள் நடக்கும். இதிலேதான் தேர்வுகள் நடக்கும். இதிலேதான் சட்டங்கள் இயற்றப்படும். இந்த மொழியிலேதான் நாடாளுமன்றத்தில் பேசுவார்கள். இது தெரிந்தால் இங்கெல்லாம் வா. இது தெரியாவிட்டால் இரண்டாந்தரக் குடிமகனாக ஏனோதானோவாக எடுப்பார் கைப்பிள்ளையாய் அடங்கிக் கிட'' இது தான் இந்தித் திணிப்பாளர் கூறுமல் கடைபிடிக்கும் கொள்கைத்திட்டம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தென்னாட்டு மக்களுக்குத் தெளிவாகக் கூறி விளக்கினார்கள்.

இந்தி தேசிய மொழி என்ற நிலையை அடையக் காரணமாக இருந்தது. வெள்ளையர் ஆதிக்கம்தான். ஆங்கில மொழியின் நிர்வாக ஆதிக்கம் தான் அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவில் தேசிய உணர்ச்சியை எழுப்பியது போல தேசிய மொழி ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் ஆங்கிலத்தின் ஆதிக்கம் அழியும். ஆங்கிலத்தின் ஆதிக்கம் அழிந்தால் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிரச்சார சாதனங்கள் நிர்வாக அமைப்புகள் கல்விமுறைகள், அரசியல் சமுதாய இலக்கிய கருத்துக்கள் அழிந்துவிடும். ஆங்கிலேயர் ஏகாதிபத்யமே இந்திய மண்ணிலிருந்து பூண்டோடு ஒழிந்துவிடும் என்று அன்றைய அடிமை இந்தியாவின் காங்கிரசுப் பக்தர்கள் இந்தி மொழி ஆதிக்கத்திற்கு அரண் அமைத்தனர்.

உத்தமர் காந்தியடிகளும் தேசிய மொழி ஒன்றுவேண்டும் என்றுதான் விரும்பினார். (ஆனல் அது இந்தி மொழியன்று. அவர் தேர்ந்தெடுத்த மொழி இந்துஸ்தானி. இந்தியர், முகமதியர் மத்தியில் வேறுபாடு இல்லா நிலை காண உருது எழுத்துக்களைக் கொண்ட இந்துஸ்தானிதான் பொதுமொழியாக இருக்க வேண்டும் என்றார். ஒரு முறை இந்திப் பிரச்சார சபையின் வெள்ளி விழாக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த காந்தியார் 'இந்திப் பிரச்சார சபை என்ற பெயரை மாற்றிவிட்டு இந்துஸ்தானி பிரச்சார சபை என்று எழுதுங்கள்' என்று கூறினார். இந்துஸ்தானியில் தேவநாகிரி எழுத்து மட்டும் எழுதினல் மூஸ்லீம் சகோதரருக்கு — சிறுபான்மையினருக்கு அநீதி விளைவிப்பதாகும் என்ற அவருடைய எண்ணத்திற்கு வேண்டுகோளுக்கு மாருக இந்தியை வட நாட்டினர் பொதுமொழியாக்கி விட்டனர்

அந்தக் கொடுமையை எண்ணி அன்றைக்கே வருந்தியவர் உண்டு, தாதாபாய் நெளரோஜி அவர்களின் பேத்தி பெரின் பென் என்பவர் காந்தியடிகட்கு இது குறித்துக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியிருக்கிறார்.

''ஆண்டுக்கணக்காக நாம் பாடுபட்டு ஒருமுகமாக ஒத்துழைத்து வளர்த்த இந்துஸ்தானி மொழியை தேசியமொழி என்ற தகுதியிலிருந்து இறக்கி, இந்தியைத் தேசிய மொழியாக்க — பெருந்தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் முற்படுவது வருந்தத் தக்கது; வஞ்சகம் நிறைந்தது! அவமானமிக்கது''

இந்தி பொது மொழி என்பதால் கட்டாயபாடமாக்கப் பட்டது என்று தமிழகத்தில் இராஜாஜி அவர்கள் அறிவித்தவுடன் தமிழகம் போர்கொடி உயர்த்திவிட்டது. இந்தி மொழி ஆதிக்கத்திற்கு ஆரம்ப முதலே எதிர்ப்புத் தெரிவித்த மண் தமிழ் மண்தான்.

2—12—37 ல் சென்னை மாநில தமிழர் மாநாடு திருச்சியில் கா. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் கூடியது. நாவலர் சோமசுந்தர பாரதியார்வரவேற்க உமாமகேசுவரனர் திறந்து வைக்க பெரியார் சிறப்புரையாற்றினர் அவர்தம் உரையின் இறுதியில்

சின்னம் பொறித்த கொடியேந்தி தமிழ் பரணி பாடி ஊர்வலம் போகிறார். (சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கிறேன். இந்திக்கு எதிராய் தலைமை ஏற்கப் போகிறேன் என்ற அ. தி. மு. க. புரட்சித் தலைவர் பெயர் எங்கேயும் இல்லையே). விசாரணைக்கு வந்த வழக்கில் தந்தை பெரியார் எதிர்த்து வழக்காடவில்லை. கீழ்க்கண்டவாறு வாக்குமூல அறிக்கை தந்தார்,

'அடக்குமுறை காலத்தில் இம்மாதிரி நீதிமன்றங்களில் நியாயத்தை எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம். ஆதலால் இந்த நீதிமன்றத்தின் நியாயத்தில்— இந்த வழக்கில் எனக்கு நம்பிக்கையில்லை எனவே கோர்ட்டார் அவர்கள் திருப்தி அடையும் வகையில் தங்களால் எவ்வளவு அதிகத் தண்டனையைக்

திருக்க காணுகையில் களிபேருவகைக் கொள்கின்றோம். இந்தத் தமிழ் ஆட்சி மொழி ஆகாவண்ணம் கி, பி 1400 ல் இராமாநந்தரின் ஆதிகிருந்தமும் அலதி மொழியில் கவிதாசரின் பாடல்களும் உள்ள ஒட்டுண்ணி இந்திஊராள வந்தால் ஒப்புக் கொள்ள முடியுமா?

1948ல் ஈரோட்டுமாநாட்டில் பேரறிஞர் அண்ணா உரையாற்றும்போது நாங்கள்களம் நோக்கி புறப்பட இருக்கின்றோம். நீங்களும் எங்களைக் களத்தில் சந்தியுங்கள். சொந்த மொழிக்காக எங்கள் உயிரையே கொடுப்போம் நீங்கள் அயலார் மொழிக் காக்க உடன்பிறந்தோரைக் கொல்லும் உத்தமர் என்ற பெயரை பெற்றுக் கொள்ளுங்கள்; ஆனல் இந்தி மொழி காக்கும் போரில் மட்டும் உங்களால் வென்றுவிட முடியாதுவீரரை

1952-ல் மீண்டும் இந்தி தமிழகத்துள் நுழைந்தபோது தி. க., தி. மு. க. இரண்டும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகி போர்க்களம் அமைத்தது. தந்தை பெரியார் திருச்சி புகைவண்டி நிலையத்தில் பொறிக்கப்பட்ட இந்திஎழுத்துக்களைத் தார் கொண்டு அழித்தார் அண்ணா அவர்கள் தந்தை பிறந்த ஊரான ஈரோட்டின் புகைவண்டி நிலையத்தில் இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழித்தார். கலைஞரோ தந்தை பெரியார் அமைத்த களமான திருச்சியில் அஞ்சல் அலுவலகத்தின் இந்தி எழுத்துக்களை அழிக்கின்றார் இந்தியை எதிர்க்க நான் தலைமை ஏற்பேன் என்ற எம் ஜி ஆர் எந்த இடத்தில் தார்ச்சட்டி தூக்கி போய் இந்தி எழுத்தை அழித்தார்? களங்கம்சேர் சந்திரன் காரிருள் விரட்டும் கதிரவனுக்கு சவால் விடுவதா?

1965-ல் எந்தக் கலைஞர் அவர்களை பாளைச் சிறையில் 60 நாட்கள் அடைத்து வைத்தாரே அந்தப் பெரியவர் பக்தவத்சலம் அவர்களே இந்தித் திணிப்பின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார். 'மைல் கற்களில் உள்ள அரபு எண்களை மாற்றி இந்தி எண்களை எழுத வேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது. என்பதை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை''

இந்த இந்தித் திணிப்பில் மொழிப் பிரச்சினை மட்டுமல்ல, அரசியல் பிரச்சினை ஆதிக்கப் பிரச்சினை, வரலாற்றுப் பிரச்சினை, பண்பாட்டுப் பிரச்சினை, நாகரிக பிரச்சினை உரிமைப்பிரச்சினை, தகுதி பிரச்சினை திறமைப் பிரச்சனை எதிர்காலப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சனை, உலகப் பிரச்சினை, பயிற்சி மொழி பிரச்சினை, போன்ற பல்வேறு பிரச்சினைகள் அடங்கியுள்ளன. எனவேதான் சட்டத்தைத் திருத்தியமைக்கச் சொல்லுகின்றோம். இந்தியத் துணைக் கண்டத்துபாதுகாப்பு அமைச்சராக இருந்த வி கே. கிருஷ்ண மேனன் கூறினார்

''அரசியல் நோக்கோடு சொன்னல், நாம் ஆங்கிலத்தையே அரசாங்க மொழியாகக் கொள்ளலாம். எனக்கு இந்தி ஒரு சொல்கூடத் தெரியாது சட்டமும் மக்கள் மன்றமும் மதிக்கப்பட வேண்டும். ஆனல் மக்கள் மன்றத்தின் மூலம் சட்டத்தைத் திருத்தும்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

இந்தி எதிர்ப்பு!

'ஆரிய சூழ்ச்சிக்கும் திராவிடர் வீரத்திற்கும் போர் மூண்டுவிட்டது போர் நெருங்கிவிட்டது'

என்று போர்ப் பிரகடனம் அறிவித்தார்

ஒற்றைவாடை அரங்கில் தமிழர் மாநாட்டை தாய்மார்கள் கூட்டினர். தாமரைக்கண்ணி அம்மையார் பேசுகையில்...

''சான்றோரும் உண்டு கொல், சான்றோரும் உண்டு கொல்? தெய்வமும் உண்டு கொல் தெய்வமும் உண்டுகொல்''

என்று கண்ணகி போல நாமும் கேட்க வேண்டியதாகிவிட்டது. தமிழ்மொழிக்கு வருங்கேடு தாய் குலத்திற்கு வருங் கேடு? சீறி யெழுவீர் என்று தமிழுணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்

நீலாம்பிகை பேசுகையில்: தாய் உணவின்றி அழுகையில் உணவு வேண்டாத மற்றொரு பெண்ணை அழைத்துவந்து சோறிட்டு கூறைப் புடவையும் கொடுத்தால் பொறுப்பதுண்டா? வளர்ச்சியற்ற இந்தியை வளர்ச்சியுற தேசிய மொழி அந்தஸ்து தந்ததுடன் ஆட்சிமொழி என்ற தகுதியையும் தருவது எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்று தன்மான உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்.

மறியலில் மூதாட்டிகள் இராமாமிர்தம். தருமம்பாள். மலர் முகத்தம்மாள், சரசுவதி அம்மையார், கோசம்பாள், சரோஜினி. மாரியம்மாள் உட்பட 73 தாய்மார்களும் 32 குழந்தைகளுடன் கலந்து கொண்டு சிறையேகி இருக்கின்றார்கள். பெரியார் சிறைபடுகிறார்' அண்ணா சிறைப்படுகிறார், கலைஞர் மூவேந்தர்

கொடுக்க முடியுமோ அவைகளையும் பழிவாங்கும் உணர்சி திருப்தியடையும் வரைக்கும் எவ்வளவு தாழ்ந்த வகுப்புதர இடமுண்டோ அதையும் கொடுத்து இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்துவிடும்படி வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்''

எவ்வளவு நெஞ்சுத் துணிவுடன் அடக்குமுறையையும் வழக்குகளின் லட்சணத்தையும் நீதியின் போக்கையும் எள்ளி நகையாடிவிட்டார் இன்றும் ஆட்சியாளர் என்றைக்கும் தாமேயிருப்போம் என்ற மனப்பால் குடித்து மமதையுடன் நடத்தும் வன்முறை செயலும் வழக்கு புனைதலும் நீதியில் தலையிடுதலும் வெறுக்கதகற்குரியதன்றோ!

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே முது குருடு. முது

ஸ். ரி. சற்குணம் பி.ஏ.

நடை. களரியாவிரை பெரும் பரிபாடல். தொல் காப்பியம் பெருங்கலித்தொகை, குறுவெண்டாளி, வியாழமாலை, முத்தொள்ளாயிரம், நற்றிணை நெடுந்தொகை அகநானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, பதிற்றுபத்து, எழுபது பரிபாடல், குறுங்கலி, திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், சீவகசிந்தாமணி. திருத் தொண்டர் புராணம், சிவஞான போதம், முதலான அரும் பெரும் தமிழ் இலக்கண இலக்கிய, சொற்சுவை, பொருட்சுவை, நுட்பம் நிறைந்த சிற்றுரை பேருரை நூல்கள் தமிழை மாறு நாகரிக இளமை பண்பாட்டு வளத்தில் வைத்

அழைக்கிறோம் வீணரையல்ல அடக்குமுறை தாங்கும் தீரர்களை அழைக்கிறோம் அரசியல் சூதாடிகளை அல்ல. வீட்டிற்கும் சிறைக்கும் வித்தியாசம் தெரியாத தியாக சீலரை அழைக்கிறோம்— சட்டசபை கொலுப்பொம்மைகள் அல்ல. நம் பண்பாட்டு மொழியைக் காக்க வீட்டுக்கொரு பிள்ளையை அனுப்புவீர்'' என்று மெய்சிலிர்க்க அறைகூவல் விடுத்தார்.

திருவாரூரில் இந்திஎதிர்ப்பு மறியல். அவ்வூரில் ஒருவீட்டில் வாழை மரம் கட்டி மங்கல இசை முழக்கம் முழங்கிக் கொண்டிருக்கிறது. மணமகனாக வீற்றிருக்கிறார் கலைஞர் மணமகள் வரவுக்காக அவ்வழியே இந்தியை எதிர்த்து முழக்கமிட்டபடியே மறியலில் கலந்துகொள்வோர் வருகிறார்கள். மணமகள் வரவு காண்பதைக் காட்டிலும் மறியலில் கலந்து கொள்வதை இனிமையாகக் கருதிச் சென்று செயல் முடித்துத் திருப்பிய பின்பே தயாளு அம்மையாருக்குத் தாலி அணிவித்தார் கலைஞர்.

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம் உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற



பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

இந்தியால் இருளடையும் இந்தியா!

ஜனவரி 26.

இது குடியரசு நாள் இந்தியாவுக்கு!

தமிழ்நாட்டுக்கு — இது பைந்தமிழ்ப் பறவையைப் பாளைச்சிறையில் அடைத்த நாள்!

மெல்ல—இந்தியால்தமிழ்ச் சாகும் என நினைத்து மெழுகாகத் தீயில் உருகிய தியாகிகளின் தினம். துப்பாக்கிப் போட்ட துளைகளால்—நட்சத்திர வடுக்களைப்பெற்றமாணவ வானங்கள் — இறப்பு இரவுகளைச் சந்தித்த நாள்!

அதேநாளை 1979 ம்ஆண்டு மீண்டும் தமிழனுக்குத் தர வருகிறது!

இல்லங்கள் தோறும்
கறுப்புக்கொடி
வீதிகள்தோறும்
கறுப்புகொடி தோரணங்கள்
கருஞ்சட்டை மௌன
ஊர்வலங்கள்

இது தமிழ் — தமிழனுக்கு இட்ட ஆணை!

ஆம் கலைஞர் இட்ட கட்டளை!

ஒரு மொழியின் உண்மையான வடிவம் உள்மனம் (சப்கான்ஷியஸ்) வழங்குகிற கனவில் தெரிகின்றன.

உள்மனம் (சப்கான்ஷியஸ்) எப்போதும் உண்மையின் (டுரூத்) விளைவு

என்னுடைய உள்மனத்தை (சப்கான்ஷியஸ்)விட இந்தி மொழி எனக்கு நெருங்கிய உறவு இல்லை'

என்தாயின் உதடுகளால் என் சிந்தனைகள் திறக்கப்பட்டன.

அவள் பேசிய ஒவ்வொரு துளி சத்தத்தையும் அரசியல் சட்டம் எதிரொலிக்காவிட்டால் — என்னை ஆள்கிறவன் வேற்று மொழிக்காரன் என்பதை நானே பிரகடனப் படுத்துவேன்.

என் தாய்மொழியைப் புரிந்து கொள்ளாத நாடாளு மன்றத்தை ஆதிக்கக் (டாமினேஷன்) கூடாரமாகவே நினைக்கிறேன்!

என் கனவுகள் தமிழில் உருவாக்கப்படும்போது நினைவுகள் மட்டும் எப்படி இந்தியில் நிலைத்திருக்கும்.

இந்திய எல்லைக்காக—இந்தியாவின் மானத்திற்காக — உயிர் போகட்டும் பரவாயில்லை!

இந்திக்காகத் — தமிழ்நாட்டுக் கவரிமான், மயிரையும் இழக்கத் தயாராக இல்லை!

சுதந்திரம் இந்தியாவுக்கு வாங்கினர்களே தவிர இந்திக்கல்ல!

என் தமிழை வைத்து இந்தியாவைப் பார்க்கத் தயார்! இந்தியை வைத்து என்வீட்டு எலியையும் பார்க்கமாட்டேன்!

உத்தரப் பிரதேசத்துக்காரன் எல்லா மொழியையும் ஊமையாக்க எந்தப் பரப்பிரம்மம் கட்டளை இட்டான்? தேசபக்தி என்பது எங்கள் தேன்நிலவில் ஹை—ஹொய்-என்ற குதிரைச் சத்தம் கேட்க வேண்டும் என்று எவன் சொன்னான்?

ஜனவரி 26!

துக்கத்தின் அறிகுறி—தூக்கத்தின் அறிகுறி அல்ல!

சோறுபோட வழியில்லை
வேலை கொடுக்க
வகையில்லை
வாழ்க்கைத்தரம்
உயர்த்த வக்கில்லை
திட்டமிட திராணி இல்லை
ரூபாய் மதிப்பு 24 காசு
அதைஉயர்த்தநாதியில்லை!

இந்தி என்ற எருமை மேய்க்க மட்டும் பார்லிமெண்டா?

'உங்கள் ஹை' 'ஹை' சத்தத்தைச் சரித்திர கால ஆடும் – மாடும் புரிந்து கொள்ளலாமே தவிர மனிதன் எப்படி மனப்பாடம் செய்வான்?

தமிழைஅழிக்கிறஇந்தியை இரண்டாகக் கிழிக்கிற நகங்களைத் தமிழ்நாட்டுப் பூந்தோட்டங்களே வளர்க்கும் மல்லிகை என்று அவைகளை மார்போடு அணைக்க வேண்டாம்!

வினைக உயிர்ச்சேதங்களை உருவாக்கி—இந்தி மொழிக்கு உயிர்மெய் எழுத்துக்களைக் கண்டு பிடிக்க வேண்டாம்.

இந்தியாவை இணைக்கக் கல்லறைகளைத்தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டாம்

ஆங்கிலம்மக்களை இணைத்த முறையே வேறு.

அது விஞ்ஞானத்தால் இணைத்தது

அது டெக்னலஜியால் இணைத்தது.

நாவல்களால் — சிறுகதை இலக்கணத்தால் — நாடக டெக்னிக்கால் — இலக்கியப் புதிய வடிவத்தால் ஆங்கிலம் மக்களை இணைத்தது

இந்தி வெறும் சுக்கா ரொட்டியால் மக்களை இணைக்க முயல்கிறது!

கவிஞர் குடியரசு

அதனால் 'அல்சர்' வருமே தவிர 'ஆல் இண்டியா' வராது

ஆயிரம் பேரில் ஆறுபேரே பத்திரிகை படிக்கிற பகுதியைச் சார்ந்த இந்திக்காரன் இந்தியாவை ஆள நினைப்பது அடிமுட்டாள் தனத்தில் ஏற்பட்டபேராசை!

பத்திரிகை படித்து ஊர் விஷயம் தெரிந்து கொள்ள முடியாத தற்குறிகளுக்கு நாடாளுமன்றத்தை நடத்த என்ன யோக்கியதை இருக்கிறது?

இலக்கணமும் — இலக்கியமும் உள்ள மொழிகள் ஒடுங்கி நிற்க — மொழிக்குரிய இலட்சணம் ஒன்றுமே இல்லாத 'காட்டுக்கூச்ச'லுக்கு நாடாளும் தகுதி தேவையா?

பெரும்பான்மையான காட்டுமிராண்டிகளுக்காக நாகரிகம் நழுவி ஓடவேண்டுமா!

காற்று பெரும்பான்மை தான்—அதற்காக சிறுபான்மையான 'நிலம்' -தேவை இல்லையா!

நிலம்' இல்லாத இடத்தில் காற்றுல் எந்த உயிருக்கு இடம்

மனித உடலில் பெரும்பான்மை மயிர் அதற்காக சிறுபான்மையாக இருக்கிற கண்களை எவன் இழப்பான்?

மொழியில் என்ன பெரும்பான்மை — சிறுபான்மை வேண்டிக்கிடக்கிறது?

ஒரு குத்துச்சண்டை வீரன் —சிறுபான்மையாக இருக்கிற தன் ஆசிரியன் பேச்சைக் கேட்பானே தவிர — பெரும்பான்மையாக இருக்கிற பார்வையாளர்களின் விமர்சனத்தையும். ஆலோசனையையும் கேட்டால் எதிரியிடம் உதைதான் வாங்கவேண்டும்!

மூட்டைப்பூச்சியின்பெரும்பான்மையையும்—கொசுவின் பெரும்பான்மையையும் சனநாயக மனப்பான்மையோடு இரவுக் காலங்களில் தூங்கும் போதுபிரதமர் ஏற்றுக்கொள்வாரா?

பெரும்பான்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காக சனநாயக ரீதியில் ஒரு பெண் எத்தனைக் கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? ஏனென்றால் ஒரே கணவன் மெஜாரிட்டி இல்லை—மைனாரிட்டிதானே

எனவே பெரும்பான்மை என்ற பேச்சுக்கே மொழி விஷயத்தில் இடம் இல்லை!

தண்டவாளத்தால்-தபால் தந்தியால் இணைக்க முடியாத இந்தியாவை இந்தியால் இணைக்கப்போவதாகக் கூறுவது—சர்வாதிகாரத்தின்சாயலேயன்றி வேறில்லை

மக்களை மதம்கூட இணைத்து விடுவதுண்டு. ஆனால் இந்து மதம் வெள்ளையனை விரட்டப் பயன்பட்டதன்றி — மக்களை சாதியால் பிரித்துவிட்டது!

மொழிகள் இயல்பாகவே பிரிந்து நிற்கும்.

எந்தமொழியும் — கலை — இலக்கிய நன்கொடைகளை 'கான்டிரிபியூஷன்) உலகுக்கு வழங்கினால் ஒழிய மக்களை இணைக்க முடியாது!

அந்த ஆற்றல் இந்திக்கு இல்லை என்பதை உணர்ந்த இந்தி வெறியர்கள்—சட்டத்தால் முயன்று பார்க்கின்றனர்.

அந்தப் போக்கினை எதிர்க்கின்ற நாள்தான் ஜனவரி 26

இல்லந்தோறும் கறுப்புக் கொடி ஏற்றி — 'இருண்ட இந்தியா' இதுவென்றுகாட்டுவோம்!

கறுப்புச்சட்டை அணிந்து மௌன ஊர்வலம் நடத்தி நம் துக்கத்தை வெளிப்படுத்துவோம்

அண்ணன் காட்டிய வழியில் அணிவகுப்போம்!

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அறப் போருக்குத் தயாராவோம்!

ஜனவரி 26-ஆம் நாள் 'குடியரசு' நாளை துக்க நாள் என்று அறிவித்து கறுப்புச்சட்டை அணிய வேண்டும்; கறுப்புக்கொடி ஏற்றவேண்டும் என்று தி. மு. க. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

கட்சி வேறுபாடுஇன்றி இந்தி எதிர்ப்புப் போராட்டம் எங்கே துவங்கினாலும் நாம் அனைவரும் அதில் கலந்து கொள்ளவேண்டும்.

ஜனவரி 26-ந் தேதி துக்க நாள் என்று அறிவித்து இந்தியை எதிர்க்கும் முயற்சியில், திராவிடர் கழகமும் முழுமூச்சோடு பங்கு கொள்ளும்

திராவிடர் கழகக்கருஞ் சட்டைவீரர்கள்ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15-லும் துக்கநாள் கொண்டாடுவது வாடிக்கை. அது போல ஜனவரி 26ம் நாளிலும் கருஞ்சட்டையுடன் இருந்து துக்க நாள் கொண்டாடி, இனி வரவிருக்கும் அறப்போர்கட்கு தங்களைத் தயார்படுத்திக்கொண்டு தயாராக இருக்கவேண்டுகிறேன்.

கி வீரமணி

(பொதுச் செயலாளர்
திராவிடர் கழகம்)



ஜன. 26-ல் ஏன்?

"சனவரி 26—ஆம் நாள் துக்க நாள் — கண்டன நாள்" என்று நாம் அறிவித்தோம். உடனே, உண்மையான காங்கிரசார் இரண்டொருவர். 'உங்களுக்குப் போயும் போயும் இந்த நாள்தானு கிடைத்தது? இது குடியரசு நாளல்லவா?" என்கிருர்கள். நியாயமான கேள்வி — கேட்க வேண்டிய கேள்விதான்.

"அது குதூகலத்துக்கு உரிய நாள்' என்று தெரிந்துதான் அந்த நாளைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். அதனுல்தான் டெல்லி முதல் சென்னை வரை, தலைமை அமைச்சர் முதல் முதலமைச்சர் வரை, அதைப் பற்றி பேசுகிருர்கள்.

வேறு ஏதாவது ஒரு நாளைத் தேர்ந்தெடுத்திருந்தால் "ஏதோ அவர்களுக்குத் துக்கநாளாம் கொண்டாடுகிருர்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்க் கொண்டேயிருப்பார்கள்.

ஊரில் ஒரு கோடியில் நாயனக் கச்சேரி நடந்தால், எதிர்க் கோடியில் இருக்கும் மக்கள் தங்கள் பேச்சை நிறுத்திவிட்டு நாயனத்தை ரசித்தால் அது உண்மையிலேயே நல்ல கச்சேரி. அதை விட்டு விட்டு, பக்கத்திலே உட்கார்ந்து ஊதி ஊதித் தள்ளினுலும் தங்கள் பேச்சை நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தால் அந்தக் கச்சேரி நல்ல கச்சேரி இல்லை — வாசித்தவரும் சுகம் இல்லை.

அதுபோல, சனவரி 26-ந் தேதி துக்க நாள் என்று நாம் பேசுகிறோம். அதற்கு ஒரு வாரம் முன்னதாகவே அதைப்பற்றி இவர்கள், ஆளுங் கட்சிக்காரர்கள்-பேசுவது தொலைதூர நாதம் கேட்டு இரசிப்பதுபோல் திருப்தியைக் கொடுக்கிறது.

—பேரறிஞர் அண்ணா

மாயூரம்— செம்பனார்கோயில் பொதுக்கூட்டப் பேச்சு
19—1—65.

காட்சி 16

(தொடர்ச்சி)

(தெருவில், பெட்டி படுக்கைகளைச் சுமந்தவாறு சென்று கொண்டிருக்கிற சுந்தரி, அந்த இருளில் ஒளிவிளக்குக் கம்பத்திடம் போய் நின்று கொண்டு சுற்று முற்றும் பார்க்கிருள். தொலைவில் ஆட்டோ ரிக்ஷா ஒன்று இருப்பதைப் பார்த்துவிட்டு- "அய்யா! ஆட்டோ ரிக்ஷா! அய்யா ஆட்டோ ரிக்ஷா!" என்று கைதட்டிக் கூப்பிடுகிருள். ஆட்டோ ரிக்ஷாக்காரர் அருகே ஓடிவந்து "என்னம்மா வேணும்?" என்று பரிவுடன் கேட்கிருர்)

சுந்தரி; ரிக்ஷாவை அங்கேயே விட்டுட்டு நீங்க மட்டும் வர்ரீங்களே; ஆட்டோ ரிக்ஷா ரிப்பேர் ஒண்ணுமில்லியே!

ஆட்டோ ரிக்ஷாக்காரர்:— இல்லம்மா! நல்லாத்தான் இருக்கு' இருட்டிலே ஒரு சின்னப் பொண்ணு தனியா நின்னுகிட்டு பரபரப்பா கூப்பிட்டோடன என்னமோ ஏதோன்னு ஓடியாந்துட்டேன்... என்னம்மா வேணும்? ஆட்டோ ரிக்ஷா வேணுமா?

சுந்தரி: ஆமாய்யா! தியாகராய நகர் பாண்டி பசாருக்குப் பக்கத்திலே... பங்காரு சாமின்னு ஒரு வக்கீல் வீடு இருக்கே, தெரியுமா?...

ஆட்டோ: ஓ.. தெரியுமே! ரொம்ப கெட்டிக்கார வக்கீல், தங்கமான மனுஷன் நீ, அவருக்கு என்ன வேணும்மா — மகளா? மருமகளா?...

சுந்தரி: சும்மா தெரிஞ்சவர்தான்! இன்னைக்கு பகல்ல அவர் வீட்டுக்கு ஒரு கேஸ் விஷயமா போயிருந்தேன். அந்தக் கேஸ் இன்னம்முடியலே. அதனுல அவர் வீட்டிலேயே போய் தங்கியிருந்துட்டு நாளைக்கு அந்தக் கேஸ் விஷயம் கவனிக்கலாம்னு நினைச்சு ... புறப்பட்டேன்... அய்யா! இதுக்குமேல ஒண்ணும் கேக்க வேண்டாம். தயவு செய்து என்னை அந்த வக்கீல் வீட்டிலே கொண்டுபோய் விடமுடியுமா?

ஆட்டோ: ஓ! அதுக்கென்னும்மா! வாம்மா, வந்து ஏறு நம்ம ஆட்டோவிலே அஞ்சு நிமிஷத்திலே அந்த வக்கீல் வீட்ல கொண்டு போயி விட்டுடுறேன்.

(என்றவாறு, சுந்தரியின் பெட்டி படுக்கைகளை ஆட்டோரிக்ஷாக்காரர் தூக்கிக்கொண்டு போகிருர். சுந்தரியும் அவரைப் பின்தொடருகிருள். திரைக்குப் பின்னுல் ஆட்டோரிக்ஷா. புறப்படும் ஒலியும் போகும் ஒலியும் கேட்கிறது. அந்த ஒலி மறைவதற்கும் அண்ணச்சியும் நொண்டியும் வந்து தெருவில் உள்ள விளக்குக் கம்பத்திடம் தள்ளாடியாடியவாறு நிற்பதற்கும் சரியாக இருக்கிறது. இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு உடல்களில் சிறுசிறு காயங்களுடன் களைப்புற்றுக் காணப்படுகின்றனர்)



புனித ராஜ்யம்



நொண்டி: அண்ணச்சி' என்னால நிக்ககூட முடியலே வீணு நம்ப ஒருத்தரோட ஒருத்தர் மோதி உடம்பைக் கெடுத்து கிட்டதுதான் மிச்சம்.

அண்ணச்சி: நீ நொண்டியா இருந்தாலும்என்னை நொக்கு நொக்குன்னு நொக்கிப்புட்டேடா! பாருடா, என் முதுகெல்லாம் வளைஞ்சு போச்சு.

நொண்டி: ஒரு பொம்பளை நம்பளை எப்படி ஏமாத்திட்டா பாத்தியா? அந்த வாடிக்கைக்காரபாலம்மா கூட வுல்ல நம்ப காலை வாரி விட்டுட்டா!

அண்ணச்சி அந்தக் கிழவியையும், சொக்கிக் குட்டியையும் சும்மா விடக்கூடாது பழி வாங்கியே தீர வேண்டும்.

நொண்டி: இது என்ன அண்ணச்சி பெரிய காரியம்? நம்ப புனித ராஜ்யத்திலே நம்ப நினைச்சது நடக்கிலேன்னு அப்புறம் என்ன இருக்கு? அந்த சூப்பிரண்ட்டு சுந்தரத்தையே பொய்கேஸ்லே மாட்டி விட்டிருக்கோம். சொக்கியும் பாலம்மாளும் என்ன சுண்டைக்காய்!

அண்ணச்சி: சரி, இப்ப எங்க போறது? என்ன பண்றது?

நொண்டி: இப்ப நம்ம ரெண்டு பேரும் ரொம்ப நொந்துபோயிருக்கோம். மறுபடியும் பாலம்மா வீட்டுக்குப் போனு அவளும் சொக்கியும் சேர்ந்துகிட்டு நம்பளைத் தீர்த்துக் கட்டினுலும் கட்டிப் புடுவாளுங்க! எனக்கு வேற தீர்த்தம் ரொப்ப சாப்பிட்டதிலே வாந்தி வர்ராப்பலே இருக்கு...

அண்ணச்சி: ஆமாம்; எனக்குக் கூட விக்கல் ஆரம்பிச்சிட்டு!

(விக்கல் எடுக்கத் தொடங்குகிருன்)

நொண்டி: (அண்ணச்சியின் நெஞ்சைத் தடவிக் கொடுத்து) மெதுவா! மெதுவா!... பயப்படாதே அண்ணச்சி; பயப்படாதே (இதைச்சொல்லிக் கொண்டே, நொண்டி வாந்தி எடுக்கும்நிலையில் குமட்டுகிருன்)

அண்ணச்சி: சரி... இப்ப எங்காவது நம்ப ரசிகர் வீட்டுக்குப் போயி படுக்கலாம் (விக்கிக் கொண்டே) ஆனு ஒண்ணு மறந்துடாதே! நாளைக்கு காலையில் போதை தெளிஞ்சு நம்ம உடம்பு சரியா வந்தவுடனே; அந்தப் பாலம்மாளையும் சொக்கியையும் ஒரு கை பார்த்தே தீரணும்.

நொண்டி; நானும் அப்படியொரு சபதம் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.... இப்ப எங்காவது போயி இந்தக் கட்டைகளைப் போடலாம்!... அண்ணச்சி! நீ என் உடம்பைப் புடிச்சு உடு' நான் உன் உடம்பைப் புடிச்சு உடுறேன்.

(இருவரும் போகிருர்கள்; காட்சி முடிகிறது)

★

காட்சி 17

(மறு நாள் பகல்)

(வழக்கறிஞர் பங்காரு சாமி அறை— பங்காரு சாமிக்கு சுந்தரம் கை குலுக்கியவாறு நன்றி தெரிவிக்கிருன். அருகே வேலனும் இருக்கிருன்.)

சுந்தரம்: வக்கீல் சார்! ரொம்ப நன்றி!

வக்கீல்: அதுக்குள்ளே ஏன் நன்றி சொல்றீங்க?... ஜாமீன்லதானே நீங்க விடுதலை அடைஞ்சிருக்கீங்க வழக்கிலேயே நீங்க விடுதலை அடைற வரையிலே எனக்குச் சந்தோஷமில்லே,

கலைஞர் கருணாநிதி

சுந்தரம்: சார்!... இந்தப் பீசை வச்சுக்குங்க... (பணத்தை நீட்டுகிருன்)

வக்கீல்: நோ! நோ!... இந்த வக்கீல் பங்காரு சாமியை நீங்க தப்பா கணக்குப் போட்டுட்டீங்க!... முழுக்கேசும் முடியட்டும் அதுக்கப்புறம் மொத்தப்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



வாழ்க ஜீவா!

★

நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
பாமணக்கும் பூதப்பாண்டி யெனும் ஊர் மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற வாய் தேன் மணக்கும்

ஆட்டம் போடும் வாலிபத்தின் — பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்விலே!
நாட்டை நினைத்தார் முதலிடமாய்!
தோட்டம் நிறையப் பூ இருந்தும்
தொலைவில் பறந்த வண்டினைப் போல்
தொண்டே என்றன் வாழ்வென்று
சுற்றிப் பறந்தார் நாட்டினிலே
வீட்டில் சிலநாள் தங்கிடுவார் — சிறைக்
கூட்டில் பல நாள் வதங்கிடுவார்!
மேடையில் முரசு கொட்டிடுவார் — வாழ்வின்
கோடையில் பயணம் சென்றிடுவார்!
'தாமரை' மலரைத் தந்திடுவார் — அதில்
தமிழாம் அமுதை உண்டிடுவோம்!
கையை ஓங்கிப் பேசிடுவார் — அங்கே
கடும்புயல் வீசக் கண்டிடுவோம்!
வாரீர் என்று அழைத்திடுவார் — அந்த
வாஞ்சை கண்டு சிலிர்த்திடுவோம்!
குன்றும் அவர்தம் தோளெங்கே?
குன்ரு அவர்தம் திறமங்கே?
நன்ரும் அவர்தம் குணமெங்கே?
நாட்டுக் குழைக்கும் பண்பெங்கே?
வீரம் செறிந்த முகம் எங்கே?
விழிகள் கொட்டும் ஒளி எங்கே?
குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப்புலியைக்
கொள்கையிலே உறுதிகொண்ட
தமிழ்க் கவியை
கொள்ளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு எனக்கேட்டுக்
குமுறுகின்ருர் நாட்டு மக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!

[21-3-63 ல் 'நம் நாடு' நாளிதழில் கலைஞர் எழுதிய கவிதை]

பாமணக்கும் தமிழ்க்குடில்

டாக்டர் மெ.சுந்தரம்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்டி,

நிழலருமை வெயிலில் தெரியும். தமிழருமை வடமொழியில் தெரியும். அதுபோல் பேர்த்தியின் அருமைப் பாட்டிக்குத்தான் தெரியும். தன் பெயரைச் சூட்டிக்கொண்டதனால் மட்டுமன்று தன்னையே வடித்தெடுத்து வந்தவள் அவள். தன்னையே உரித்து எடுத்து உலகில்தோன்றியவள் அவள் என்பது பாட்டியின் கருத்து. அவள் சிந்தனையும் செயலும் தன்னைப்போலவே இருப்பதை எண்ணிப் பெருமைப் பட்டாள் பாட்டி. எண்ணமும் பேச்சும் எல்லாம் தன் வண்ணமாகவே வளர்ந்து வருவதைக் கண்டு அவள் அகமிக மகிழ்வாள். குலக்கொழுந்து வளர்ந்து கொண்டிருந்தது. திடீரெனக் கொழுந்தில் வாட்டங்கண்டது. துளிராகித் தளிராகித் தழைக்கும் என எண்ணித் தழைத்த உள்ளம் ஏங்கி வாடியது. வாடிய நிலையில் கூடிய நிலையில் இருந்ததே தவிரக் குறையவில்லை. ஒருநாள் கொழுந்து தலை கவிழ்ந்தது. பாட்டியின் நம்பிக்கை நிலை குலைந்தது பெருமகளாகித்திருமகளாகக் காட்சியளிப்பாள் என்று அவள் கண்ட கனவு கலைந்தது. புனையா ஓவியம் போல இருந்த பேர்த்தி கலைந்த கனவாயினமை கண்டு கலங்கினாள் பாட்டி. அவள் இளமைத்துயில் மீளாத் துயரை அளித்தது. பேர்த்தி கண்ணுறக்கம் கொள்ளாமல் மண்ணுறக்கம் கொள்வதில்லை என்று நிலம் கங்கணம் கட்டிக் கொண்டவளை எழுப்பப் பாட்டி பள்ளியெழுச்சி பாடினாள். இந்தத் திருப் பள்ளியெழுச்சி கேட்டுப் பேர்த்தி திரும்பமாட்டாள் என்று தெரியும். ஆனாலும் பாட்டியின் நினைவுகள் திரும்பிப் பார்த்தன, பழைய நிகழ்ச்சிகள் படமெடுத்து வந்தன.

இளமை எழில் பேர்த்தியின் உடலில் எதிரொலித்தது கைபுனைந்து இயற்றாக் கவின் வனப்பு அவளிடம் காட்சியளித்தது. சிந்தை கவர்ந்த அந்தச் செல்வியின் அழகு பாட்டியின் நினைவில் முந்தி வந்து நின்றது.

'கோல முழிக்
கண்ணிரண்டும்
குழிக்கறையான
தின்றிருக்க
பொன்னிட்டுப்
பொன்கழற்றப்
பொருந்தலையே
உன்மேனி
மண்ணிட்டு மண்மதிக்க
வாய்த்த திருமேனி

பொன்போன்ற உடலைக் கண்போன்று காத்துவந்தாள் பாட்டி. அது இன்றுமண்ணுக்

கண்டு களிக்க வேண்டிய கண்கள், பேர்த்தியின் கண்கள். கண் அவளைக் காண்க என மாற்றிப் பாடவேண்டிய அளவிற்கு எழிலான விழிகளை அவள் பெற்றிருந்தாள் கண்ணின் பயன் அவளைக் கண்டாலே கண்ணுற் பெற்ற பெரும் பயன் குருத்தாக விளங்கும் அக்குலக் கொழுந்தைக்கண்டு களித்தலே என்று கூறத்தக்க அளவிற்கு அவள் கண் பாடி வந்தது. கண்ணன் என்ற சொல்லிற்குக் கண்ணால்

குள் போய்விட்டதே என்று மயங்கினாள். பொன்னுரைப்பூட்டிப்பார்க்கப்போகாமல் பூமிக்குள் போய்விட்டாயே என்று புலம்புகிறாள் அவள். பொன்னகை பூண்டு மின்னவேண்டிய மேனி அணிகள் சாத்தி அழகு சிறக்க வேண்டிய உடல் நகைட்பூட்டி நலம் காட்ட வேண்டிய அகம் இன்று அது அகப்படாமல் நெகிழ்ந்துவிட்டதே என்று நெஞ்சு நெகிழ்கிறாள் அவள். கண்ணுரைக் அழகு செய்பவள் தன் கண்ணழகால் கவர்பவள் என்று பொருள் உரைப்பர். அந்த இயற்கைக் கண்ணழகு அமைந்திருந்தது. காணவேண்டிய கண்ணை அவள் பெற்றிருந்தாள். அதாவது உலகைக் காணவேண்டிய கண். உலகத்தார் காணவேண்டிய கண் உலகையும் காணாமல். உலகத்தாரும் காணாமல் இன்று மண்ணிற்குள் மறைந்துவிட்டதே என்று மயங்குகிறாள் பாட்டி. கண்கள் பண்கள் பாடிவரும் என்ற இ பத்தில் திளைத்திருந்தாள். அந்தத் திளைப்பைக் கவலைக் களைப்பு ஆக்கிவிட்டுக் கண்மூடிவிட்டாள் பேர்த்தி.

அவள் பாட்டியைப் போலவே இயற்கை அறிவு வாய்ந்தவள். கற்றகல்வியைக் காட்டிலும் பெற்றிருந்த இயற்கை அறிவு பெரிது. நூலறிவைக் காட்டிலும் மதி நுட்பம் நிறைந்திருந்தது.

பள்ளிப் படிப்பைக்காட்டிலும் பகுத்தறிவுப் படிப்பு அவளுக்கு அதிகம்

'நாக்குச் சரகவதிதான்
நடு நாக்கும் வேதாந்தம்
பல்லும் சரசுவதிதான்
நீ படித்ததெல்லாம்
வேதாந்தம்
உதடும் சரசுவதிதான்
உள்நாக்கும் வேதாந்தம்'

கல்வியில் அவள் சிறந்திருந்தாள். கல்விக் கலையில் அவள் வல்லவள் ஆனாள். கை கொடுக்கும் கல்வியை அவள் கற்றிருந்தாள் பள்ளிக் கல்வியை அன்று.

'பள்ளிக் கூடத்தில்
படியாமல்கற்றுவந்தாய்
ஓடும் எழுத்தாணி
எடுக்காமல்
கற்றுவந்தாய்
தூக்கும் எழுத்தாணி
தொடாமல்
கற்றுவந்தால்

இயற்கைக் கல்வியில் அவள் இணையற்று விளங்கினாள். அதனால் பள்ளிக் கல்வி அவளுக்குப் பாலபாடம் ஆயிற்று. தூக்குத் தூக்காமல் ஏட்டுச் சுவடி எடுக்காமல்தன் நுண்ணறிவால் நுணித்துணர்ந்துஅவள் கற்ற கல்விதான். பெற்ற யாடம்தான் மிகுதி. அதனால் அவள் தகுதிக்கு மீறிள அறிவுப் பருவத்தை மிஞ்சிய பண்பாடு அவள்பால் விளங்கியது.

ஏட்டுக் கல்வியைக் காட்டிலும் நாட்டுக் கல்வி மிகுதி. அதற்கு அடிப்படை அவள் வீட்டுக் கல்வி பாட்டி முதல் அன்னைவரை இயற்கைக்கல்வியும் ஏட்டுக் கல்வியும் வல்லவர்கள். படியாமல் பரணி பாடியவர்கள். கற்றுச் செருக்காமல் கவிபாடிச் சிறந்தவர்கள். இயற்கைப் புலமையால் பாநலத்தால் குமுகாயத்தில் தங்கள் இலச்சினையைப் பொறித்தவர்கள். அவர்கள் வழி வந்த பேர்த்தியும் அப்படி விளங்குவதில் வியப்பில்லையல்லவா? நுண்ணறிவுதான் அப்பெண்ணறிவிற்கு மெருகேற்றியது. அவ்வண்ண அறிவைத்தான் எண்ணப் பாவில் எண்ணிப் பாடுகிறாள் பாட்டி.

'ஆயிரவர் பாட்டுக்கு
அரைவிருத்தம்
கற்றவதான்
பன்னிருவர் பாட்டுக்குப்
பாட்டருத்தம்
கற்றவதான்
மூத்திருவர் பாட்டுக்கு
முதல் விருத்தம்
கற்றமகள்

இளமையிலேயே நிறைந்த புலமையோடு இயங்கினாள்.

ஆண்டு குறைவு, அறிவு மிகுதி, வயது குறைவு, அறிவுவளர்ச்சி அதிகம் அதனால்பாடல்களைக் காட்டிலும் மிகுதியானவற்றைப் பயின்று இருந்தாள். பாட்டுக்குப் பாடும் பருவத்தாள் அவள். பாட்டுக்கேட்கும்பக்குவமுடையவள். அனால் அளவிற்கு மிஞ்சிய அறிவு அவளிடம் செறிந்திருந்தது. காப்பியம் கற்கும் அளவிற்கு அறிவின் செறிவு அவளிடம் இருந்தது. பழம் பாடற் பயனை அறிந்திருந்தாள் போன்று அவள் பாக்கடலில் நீந்தினாள். எண்ணற்ற பாக்களை எண்ணிப் படித்தவள். பாவே கடல். அதில் பாவை படித்ததும் பாட்டில் அது அவள் பருவத்தை மீறிய நிலையில் இறுதியில்கூட. அவள் சில பாட்டுக்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள். ப்படி அவள் பாடுவதற்கு யாராவது சொல்லிக் கொடுத்தார்களா அல்லது காரிகை கற்றுக் கவி பாடினாளா?

'சொல்லிக்
கொடுக்காமல்
சுயம்பாடி வந்திட்டாய்
கற்றுக் கொடுக்காமல்
கவிபாடி வந்தாயே'

அவள் சுய கவி தானகப் பாடும் தகுதி பெற்றவள்.

பாடம் படித்துப் பாட்டுப் பாடவில்லை. இயற்கைப் பாடம்தான் இந்த இயற்கைக் கவியை உருவாக்கியது. பின்னர் அவள் கவி பாடக்கற்றது தான் எப்படி!

ஆற்று மணல்
போடாமே
அறிவனால் கற்றிருந்தாள்
'வையை மணல்
போடாமல்
மனதினால்
கற்றவைதான்
வாத்தியார் தன்னிடத்தில்
வணங்காமல் கற்றமகள்
பள்ளிக் கூடத்தில்
படியாமல் கற்றமகள்'

அரிச்சுவடி கற்கும்போதே, ஆற்று மணல்போட்டு, அதில் தமிழ் நெடுங்கணக்கை எழுதிப் புகழவில்லை. வையைமணலும் அவள் வழிக்கு வரவில்லை. முயற்சியில்லாமல் எளிமையாக அவள் கற்கத் தொடங்கினாள். அவளை வாழ்த்தி கல்விச் செலவில் வழி நடத்திச் சென்ற வாழ்த்தியார் — வாத்தியார்கூட அவளுக்கு மிகுதியாகக்கற்றுக்கொடுக்கவில்லை. அவள் பள்ளியில் பெற்றகல்வி கொஞ்சம் ஆனால் கல்லாத நாட்கள் மிகுதி. ஆனால் கவி சொல்லாத நாட்கள் குறைவு. அதற்கு அடிப்படை அவள்கற்ற கல்வி அவளைக் கல்விச்செல்வியாக்கியது எப்படி? அவள் முன்னோர்மூதறிஞர். இயற்கை அறிவுப் பணியில் உயர்ந்தவர்கள். பாட்டி ஒரு பாட்டுப் பெட்டகம். கவின்தரு சுரங்கம சொல்லின் செல்வி, நாவரசு, கற்பனைக் களஞ்சியம். அன்னை அறிவின் ஊற்று, கல்வி நிலையம் அத்தகைய குடியில் தோன்றியவள் பாவலராக இல்லாமல் வேறு எப்படி இருபபாள்? அந்தக் குடியே செந்தமிழ்க்குடி சிந்தனைக்குடி. தமிழ் மணம் கமழும் தலைக் குடி. அது பாமணம் கமழும் பாவாணர் குடும்பம், அதில் முளைத்தெழுந்த குருத்து முத்தமிழில் மூத்த தமிழைப் பாடுவதில் எனை வியப்பு!

காதல் தானும் கடலினும் பெரியது

பனசை வளவன்

குதிரையை விட்டிறங்கி அவசர அவசரமாக உள்ளே வந்தான் கதிரவன். வீட்டு வாசலில் இளந்தளிர் இனியவன் சிறுதேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தான். கயல்விழி அடுக்களையில் உணவு தயார் செய்து கொண்டிருந்தாள்.

கதிரவன் கையில் ஓலை ஒன்று இருந்தது. நெற்றியில் முத்து முத்தாக வியர்த்து இருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே வந்து கதிரவனின் பரந்த மார்பில் தன் தலையை வைத்துக் கொண்டாள் கயல்விழி.

அன்பு மனையாளின்காரணைய கூந்தலை மிகவும் அன்புடன் கோதி விட்டான் கதிரவன்:

"அத்தான் தங்கள் கரத்தில் தவழும் ஓலைதான் யாதோ?" என்றாள் கயல்விழி.

"கண்ணே, வளவனூரில் இருந்து மாமா அனுப்பியிருக்கின்றார். அது பற்றிதான் உன்னிடம் பேச வந்தேன்."

"என்ன, மாமா அனுப்பி இருக்கின்றாரா? ஓலையில் கண்டுள்ளசெய்திதான் என்ன?"

"கயல். நான் உடனே வளவனூருக்கு வரவேண்டுமாம். அவண் சென்று வாட் பயிற்சி செய்வித்தால் நிறைய பொருள் கிடைக்குமாம். நான் இன்றே புறப்பட உள்ளேன். பயணத்திற்கான ஏற்பாடுகளைச்செய்யும்படி அருமை நண்பன் பனசைத் தோழனிடமும் கூறிவிட்டேன். உன்னிடம் விடைபெறவே வந்தேன்" — என்றான் கதிரவன்.

அவன் இப்படிக் கூறிய ஒரு சில விநாடிகளில் கயல்விழியின் விழிகளில் இருந்து பொல பொல வென்று கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது.

அவன் அருகே சென்று, தன் அன்பு மனையாளின் முகத்தை நிமிர்த்தி செவ்வரி படர்ந்த விழிகளில் இருந்து வரும் நீரைத்துடைத்தான்.

"கண்ணே. கண்ணீருக்குக்காரணமும்தான் யாதோ?"

"விடையையும் கூறிவிட்டே வினவையும் எழுப்புகின்றீர்களே!"

"புரியவில்லையே?"

"புரியும்படி கூற வேண்டுமானால் தாங்கள் வினை முற்றி வருவதற்குள்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

அவரும் இவரும்

வழக்கறிஞர் என்.வி.என். சோமு

"எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழென்று
சங்கே முழங்கு
எங்கள் பகைவர்
எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்
ஒன்றுதல் கண்டே

— என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்!

தமிழர்கள் — தமிழறிந்தவர்கள் வேறு பிரச்சினையில் ஒன்றுபட இயலாவிட்டாலும், மொழிப் பிரச்சினையிலாவது ஒன்றுபடுதல் நன்று.

தமிழகத்தின் பிரதிநிதிகளாகச் டெல்லிக்குச் செல்வோர் — அங்கே ஆட்சி பீடத்தை அலங்கரிப்போர், அன்னைத் தமிழ்மொழியை வளர்த்திட அருந்தொண்டாற்ற வேண்டும் என்றுதான் தமிழ்கூறும் நல்லுலகம் எதிர் பார்க்கும்!

ஆனால்,

"நல்லது செய்தல்
ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல்
ஓம்புமின்"

என்றனர் தமிழ்ச் சான்றோர்!

தமிழகத்தின் பிரதிநிதியாக மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் பா. இராமச்சந்திரன் இந்தியில் கையெழுத்திட்டு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துக்களை புகையும் உள்ளத்தோடு பார்த்தோம்!

மறுமலர்ச்சித் தூதுவராகப் பணியாற்ற வேண்டியவர் — மயக்கத்தில் ஆழ்ந்து விட்டாரே என்ற வேதனைதான் மிஞ்சுகிறது!

1965ல் தமிழகத்தில் மூண்ட மொழிப்போரின் பாது மாணவச் சிங்கங்களின் எழுச்சிமிகு கிளர்ச்சி கண்டு மத்திய அமைச்சர்களாக இருந்த சுப்பிரமணியம் — அழகேசன் போன்றோருக்கே உணர்ச்சி ஏற்பட்டு பதவியைத் துறந்தனர் — சில நாட்களாகிலும்!

அந்த உணர்ச்சி கூட பா. இராமச்சந்திரன் அவர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்ச நேரிகிறது!

முன்னர் டெல்லிப் பேரசில் நிதி அமைச்சராக இருந்த திரு. ஆர். கே. சண்முகம் (செட்டியார்) அவர்களுக்கு இருந்த உணர்ச்சியும் — எழுச்சியும் தமிழகத்தில் இருந்து செல்லும் எல்லா மத்திய அமைச்சர்களுக்கும் இருக்குமானால் எழிலார் தமிழகமாக நமது தாயகம் தலையெடுக்கும்!

கூறுகிறார் கேளுங்கள் ஆர். கே. சண்முகம் அவர்கள்:

"டில்லியில் நிதிமந்திரி வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். வங்காளத்திலிருந்து மகாத்மா தில்லிக்கு வந்து சேர்ந்தார். மறுநாளே அவரைத் தரிசிக்க வேண்டுமென்று பிர்லா வீட்டுக்குப் போனேன். அவருக்கென்றே தனிப்பட்ட சிரிப்புடன் "வாருங்கள் ஐயா! உட்காருங்கள்! ஷேமந்தானா?" என்று தமிழில் என்னை அழைத்தார். நானும் தமிழிலேயே பேச வேண்டும் என்று கோருகிறேன். என்றேன்; சிரித்தார் அதற்குமேல் அதிகம் தமிழ்பேச அவருக்குத் தெரியாது. தென்னப்பிரிக் தமிழ் மக்களிடையே வேலை செய்தபோது சில தமிழ் வார்த்தைகளை மட்டும் படித்திருந்தார். மேற்கொண்டு சம்பாஷணை ஆங்கிலத்திலேயே ஆரம்பித்தார்: சுதந்திர இந்தியாவில் மந்திரி ஸ்தானம் நீ பெற்றிருக்கிறாய், உன்னுடைய சகாக்களாகிய மற்ற மந்திரிகளுக்கு நீ தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும்'. அது உன்னால் முடியாவிட்டால் நீ இந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். "நான் இந்துஸ்தானி கற்றுக் கொள்வது சுலபம் என் எனக்குத் தோன்றவில்லை. தங்களுடன் நாள்தோறும் முப்பது வருஷ காலமாக நெருங்கிப் பழகிய ராஜாஜி அவர்களே சரியாக இந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் என்னால் எப்படி முடியும் என்றேன். பலத்த சிரிப்புச்சிரித்தார்.

—இப்படி ஆர். கே. எஸ். காந்தியடிகளுக்கு நேராகவே சொல்லி விட்டார், இந்தி கற்றுக் கொள்வது கடினம் என்று! ஆனால் பா. ரா. வோ வேக வேகமாக இந்தியில் கையெழுத்து போடுகிறார். 1948 எங்கே 1978 எங்கே?

இப்படி—இந்தி பேசாதவர்களே இந்திக்கு லாலி பாடினால் அவர்களின் கதி வின்னவது?

அதனால்தான் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. மனம் வெதும்பிக் கூறினார்:—

"ஒரு திங்கள் தமிழ்ப் பயிற்சி காந்தி அடிகளைப் பெரிதும் கவர்ந்தது எனில் முழுப் பயிற்சி அவரை என்ன செய்திருக்கும்? சபர்மதியில் இருந்து அவரைத் துரத்தி தாமிர பரணியில் அன்றோ கொணர்ந்து சேர்ந்திருக்கும்? அடிகட்கு மீண்டும் பிறப் புண்டேல் அவர் தமிழ் நாட்டில் பிறப்பர் என்னும் உறுதி எனக்கு இருக்கிறது. ஆண்டவனே, காந்தியடிகளைத் தமிழகத்தில் பிறக்குமாறு செய்து அவரைத் தமிழராக்கி அவரது வாயிலாக எனது அருமைக் கன்னி மொழியை வளர்க்கத் திருவருள் செய்க"

— என்று மனம் வெதும்பிக் கூறினார், திரு. வி. க!

அவரும் தமிழர்தான்! இவரும் தமிழர்தான்!

★

காதல் தானும்...

(8 ப் பக்கத் தொடர்ச்சி)

யானும் நம் புதல்வனும் உயிரோடிருக்க மாட்டோம்'

கதிரவன் பதறியே விட்டான்.

'கயல் என்ன சொல்கின்றாய்?'

"ஆம் அத்தான், உங்களைப் பிரிந்து வாழும் ஆற்றல் எனக்கும் இல்லை. நம் அன்புச் செல்வனுக்கும் இல்லை. தங்களைப் பிரிந்து இருக்கும் ஒவ்வொரு விநாடி நேரமும் ஒரு பெரிய யுகமாகவே கழியும். உங்களை விட்டுப் பிரிவதற்குத் தங்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ! நம் ஊரில் பயிற்றுவிக்கப் பிள்ளைகளா இல்லை. உம்...பொருள் வரவு. எம்மையும், நம் அன்புச் செல்வனையும் பிரியக் கூடத் துணிந்து விட்டீர்கள். சென்று வாருங்கள், தங்களை வரவேற்க நான் இருக்க மாட்டேன்."— என்று கூறிவிட்டு அடுக்களைக்குள் சென்று விட்டாள் கயல் விழி.

கதிரவனும் பேசாமல் சென்று விட்டான். மாலை வந்தது. கதிரவன் மலர்ந்த முகத்துடன் இல்லத்தினுள் நுழைந்தான்.

"கயல்" என்று குரல் கொடுத்தான்.

துக்க மிகுதியால் சோர்ந்துபோய் இருந்த கயலின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"தாங்கள் ஊருக்குள் செல்லவில்லையா?"

'ஊரும்...உன்னையும் நம் செல்வனையும் விட எனக்குப் பொருள் பெரிதா? ஒரு நாடகம் ஆடினேன். நீ அதற்குள் இளைத்தே போய் விட்டாய். உன் மீதும் நம் செல்வன் மீதும் நான் கொண்டிருக்கும் அன்பு கடலினும் பெரிதாகும். எனவே ஐயம் ஒழித்து அச்சம் நீங்கி களிப்புடன் இருப்பாயாக"...என்று கூறிவிட்டு, தன் புதல்வன் உறங்குகின்றானா என்று பார்த்துக்-கொண்டே கயலின் அதரங்களை மேலும்-சிவப்பாக்கினான்.

— இக்காட்சி சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் பெயர் தெரியாத ஒரு புலவர் பெருமானால் பாடப்பட்டதாகும். அப்பாடல் வருமாறு:—

"பொன்னும் மணியும்
போலும் யாழ நின்
நன்கை மேனியும்
நாறிருங் கதுப்பும்
போதும் பணையும்
போதும் யாழ நின்
மாதர் உண்கணும்
வனப்பின் தோறும்
இவை காண் தோறும்
அகம் மலிந்து யானும்
அறம் நிலை பெற்றோர்
அனையேன் அதன் தலை
பொலந் தொடிப் புதல்
வனும் பொய்தல் கற்றகை
வினையும் வேறு புலத்து
இலெனே நினையின்
யாதனின் பிரிகோ? மட நதை!
காதல் தானும்
கடலினும் பெரிதே!"

— நற்றிணை பாடல் - 66.

வெந்தணலாக எரிகிறது...

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை எனக்கும் எல்லாருக்கும் இருக்கிறது"

ஆரம்ப காலத்தில் இந்தியைக் கட்டாய பாடம் என்று தமிழகத்தில் விளையாடவிட்ட இராஜாஜி அவர்களே பிற் காலத்தில் "வெறும் கண் துடைப்பு வார்த்தைகளால் நம்மை ஏமாற்றக் கூடாது. நாமும் விழிப்பாக இருந்து வேகமாக செயல்பட்டு தடுக்க வேண்டும்... நாம் அனைவரும் இணைந்து நின்று இந்தித் திணிப்பை எதிர்ப்போம்" என்று அழுத்தமாகக் கூறினார்.

கேள்விக்குறியாக மீண்டும் தமிழகம் நிற்கிறது. பதில் அளிக்க வேண்டியவர் நாடாளுவோர். நல்ல பதில் கிடைக்கும் என நம்புகிறோம், இல்லையேல் நல்லபடி நிலைத் தமிழர்கள் அறிவிப்பார்கள். தூய்மையான இலட்சியத்திற்காகப் போராடுவதே நமது வலிவு மிக்க படைக்கலன். அஃது எத்துணை பயங்கர அடக்குமுறைகளையும் தாங்கும் ஆற்றலை நமக்கு வழங்கும்.

செந்தமிழை செந்தமிழ்
நாட்டை சிறை மீட்க
நந் தமிழர் உள்ளத்தில்
வையம் நடு நடுங்கும்
வெந்தணல் ஒன்று
விரைந்து வளர்ந்ததென்று
கூந்திக் குரலெடுத்துக்
கூவாய் கருங்குயிலே!

என்ற கவிமொழிக்கொப்ப தமிழை அழிக்கும் இந்தித் தீ எனில் அந்தத் தீயைக் காட்டிலும் தீரமிக்க எரிமலையாய்த் தமிழர் மாறினால் இந்தியா ஒரே நாடு என்ற உருமாறி போயிடுமே!

எனவேதான் சொல்லுகிறோம்; இந்தியா ஒரே நாடாக இருந்தே தீரவேண்டுமென்றால் ஆட்சிமொழியாகத் தமிழும் உயர்ந்திட வேண்டும். ஆள்பவராக உத்தரப்பிரதேசத்துக்காரரும் குஜராத்காரரும் தானிருக்க வேண்டுமா? அரசாண்ட மொழிக்காரன் அயலான் என்றால் இந்தியாவை ஆளுகிற அரசு அயலான் அரசு என்று அறிவித்திட ஆகுமல்லவா? ஆலோசனை செய்யட்டும். அறிவிப்பு தரட்டும்... அதுவரை பொறுத்திருப்போம்.

உழைப்பிற் தப்!
உறுதிக்குப்!!

எங்கள் சென்னை நகர்
பிரதிநிதி;
க எம். ஜி. மாதவன்,
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4

இறுதி மூச்சுவரை தொண்டாற்றிய இலட்சிய வீரர்!

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழக முன்னோடிகளில் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். ஜி. முருகையன் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த தி.மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

முருகையன் படுகொலை செய்யப்பட்ட இந்தக் கொடூரமான நிகழ்ச்சியை அண்மைக்காலமாக தமிழகத்தில் அதிகரித்துவரும் அரசியல் வன்முறைகளின் உச்சகட்டம் என்றே எண்ணச் செய்கிறது.

'சட்டம் தன் கடமையைச் செய்யும்...' என நாள்தோறும் வீதியெங்கும் என்னதான் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் முழங்கினாலும் 'சட்டம்' என்னவோ முடப்பொடிந்து வலுவிழந்து, பம்மிப் பதுங்கி எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறது.

இல்லாமலா —

பொது வேலை நிறுத்தம், முழுக் கடையடைப்பு நடந்த நாளன்று—பட்டப்பகலில்—கழகத் தலைவர் கலைஞரின் வீடுபுகுந்து தாக்கும் காட்டுமிராண்டித்தனத்தில் 'இரத்தத்தின் இரத்தங்கள்' ஈடுபட்டிருப்பார்கள்? சட்டம் தன் கடமையைச் செய்திருந்தால், தி மு கழகச் சட்டமன்ற உறுப்பினரான புருசோத்தமனை அ. தி மு. க. குண்டர்கள், போலீசாரின் துணையோடு தாக்குவதற்குத் துணிந்திருப்பார்களா?

இன்னொரு சட்டமன்ற உறுப்பினரான இராசரத்தினத்தை அவர் வீடு புகுந்து அ தி. மு. க. 'காலிகள்' அடித்துக் காயடபடுத்தியபோது 'சட்டம்' தன் 'கண்களை' இறுக மூடிக் கொண்டது!

அதுமட்டுமல்ல —

சட்டத்தைக் காக்க வேண்டியவர்கள் அடித்தவர்களை விட்டுவிட்டு, அடிபட்டவர்மீதே வழக்குத் தொடர்ந்துள்ளார்கள்.

தொடர்ந்து தமிழக அரசியலில் நடைபெற்று வரும் சிறியதும் பெரியதுமான வன்முறை நிகழ்ச்சிகளின் பெரிய விளைவே முருகையன் படுகொலை செய்யப்பட்டது!

இந்தப் படுகொலைக்கு ஒரு பின்னணி உண்டு என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்! அந்தப் பின்னணியின் முழு வரலாறும் விசாரணைக்குப் பிறகு வெளிவரும் தீர்ப்பின்போது தெரியத்தான் போகிறது - சட்டம் தன் கடமையை ஒழுங்காகச் செய்து, நீதியின் துலாக்கோல் யாருடைய குறுக்கீட்டாலும் சாயாது இருந்தால் நிச்சயம் அந்தப் பின்னணி உலகின்முன் வெளிப்பட்டே தீரும்.

வழக்கு விசாரணையில் இருக்கும்போது கருத்துத் தெரிவிப்பது முறையில்லை என்பதும் தெரியும் ஆனால் படுகொலை நடந்த சில மணி நேரங்களிலேயே 'இந்தக் கொலைக்குக் காரணம் நிலத்தகராறுதான்.' என்று கூறிய காவல்துறை அதிகாரிக்கு மட்டும், வழக்கு விசாரணையில் இருக்கும்போதே தன் கருத்துக்களை வெளிப்படுத்த உரிமை இருக்கிறதோ என்னவோ!

உழைக்கும் வர்க்கத்தின் அன்பையும், ஆதரவையும் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரான ஒருவர் உயிருக்கே தமிழ்நாட்டில் போதிய பாதுகாப்பு இல்லை என்றால், எந்த ஆதரவும் இல்லாத சாதாரண ஒரு மனிதனின் நிலை என்ன?

தன் உயிரை வேட்டையாட மனித விலங்குகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்று முருகையன் காவல் நிலையத்தில் முறையிட்ட பிறகும் கூட —

சட்டம் தன் கடமையைச் செய்து அவரைக் காப்பாற்றுதுபோன அவலம்தான் என்ன?

வாழ்நாள் முழுவதும் பொதுநலத் தொண்டாற்றிய ஒரு மனிதனுக்குக் கிடைத்திருக்கும் இறுதிப் பரிசு—முப்பத்தேழு கத்திக்குத்துக்கள்!

சட்டம் தன் கடமையைச்செய்யட்டும். அதில் யாவருக்கும் மகிழ்ச்சியே! உடன்பாடே! ஆனால் —

சட்டத்தை மட்டுமே நம்பியிருப்பதால பலன் ஒன்றும் இல்லை என்பதை தமிழ்நாட்டில் நடந்து வரும் வன்முறை நிகழ்ச்சிகள் மெய்ப்பித்து வருகின்றன.

எனவே —

தலைவர்களும், தொண்டர்களும் வன்முறையாளர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எதிர் நடவடிக்கைகள் ஏதாவது எடுப்பதைத்தவிர வேறு வழியே இல்லை.

- ஜாகீர்

ஆங்கிலம் அந்நிய....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று செப்பிடுவோர், இந்தியும், இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதோருக்கு அந்நிய மொழியே என்பதை உணர்ந்திட வேண்டும். இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஒரு பெங்காளிக்காரருக்கோ ஒரிசாக்காரருக்கோ, தமிழருக்கோ, மலையாளிக்கோ, கன்னடக்காரருக்கோ, கவிதெலுங்கருக்கோ ஆங்கிலத்தை விட இந்தி அந்நிய, வேற்று மொழியாகும் ஆங்கிலம் அதனுடைய 177 ஆண்டு கால வரலாற்றின் காரணமாக இந்தியரிடையே இரண்டறக் கலந்து விட்டது. ஆனால் ஆதிக்க வாதிகள் இந்தியைப்படிப்படியாக திணிக்க முற்படுகின்றனர், அஞ்சலிலே இந்தி படிப்படியாக நுழைக்கப்படுகிறது. "சடுகுடு" என்ற கிளவி மறைந்து "கபடி" கிளவி துள்ளி விளையாடுகிறது. "வானொலி" இருக்கவேண்டிய இடத்தில் "ஆகாசவாணி" புகுந்துள்ளது. அஞ்சல் அலுவலகங்களிலே முதலிலே இந்தியிலும் இரண்டாவது தமிழிலும், மூன்றாவது ஆங்கிலத்திலும் அறிவிப்பு பலகைகள் தொங்குகின்றன.

இந்த அந்நிய மொழியை விரட்ட வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

ஆதிக்க இந்தியை எதிர்க்க திருச்சி மாநாடும் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் உரையும் ஒரு திருப்பு முனையாகும். நாம் அந்நிய மொழியான இந்தியை எதிர்க்கிறோம். ஆற்றல் மிகு தமிழ் மறவர்களே அன்னை மொழியாம் தமிழைக் காத்திட 25 ம் தேதி கண்டனநாள் கூட்டங்கள் நடத்திடுவோம் 26 ம் தேதி கறுப்புச் சட்டையும், சின்னங்களையும் அணிந்து கறுப்புக் கொடியையும் ஏற்றி நம்முடைய குமுறலை, கொந்தளிப்பை செங்கோட்டையிலே கோலோச்சுபவர்களுக்கு தெரிவிப்போமாக.

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு—விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
72, அழகர்கோவில் சாலை, 72 C, வெல்லிங்டன் ரோடு, மதுரை.

வரலாற்றில்பதியும் ஜனவரி-26

முன்கூட்டியே எங்களைக் கைது செய்வார்கள் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை; அது நமக்குப் புது விவகாரமும் அல்ல; பழக்கம் இல்லாததும் அல்ல; ஆண்டுக்கு ஒரு முறை இப்படிப் போவதும், வருவதும் பழக்கமாகி விட்டது.

அந்த நேரத்தில் வெளியே உள்ள நீங்கள் மிக அமைதியாக நடக்க வேண்டும். வெளியே தாறுமாறாக நடந்தால் உள்ளே உள்ள எங்களுக்கு அது மெத்த வருத்தம் தரும்.

ஜனவரி 26 ல் கூட்டம் நடத்தினாலும் சரி, முன் கூட்டிக் கைதானாலும் சரி...வரலாறு இந்த நிகழ்ச்சிகளைப் பதியும்! நமக்கு விரோதமாக இந்தி இங்கே ஆட்சிமொழி ஆக்கப்படுகிறது என்பதை அதை நாம் முழு மூச்சோடு எதிர்க்கிறோம் என்பதை— உலகம் அறியும்.

ஜன, 26 நிகழ்ச்சி ஒரு தனி நிகழ்ச்சி. தி. மு. கழகம் இருக்கிற வரை - தமிழ் உணர்ச்சி - தன்மான உணர்ச்சி ஆகியவை உள்ள வரை; இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடக்கும்,

ஜன. 26...குடியரசு நாள்—குடியாட்சிப் பண்பை உணர்த்தும் நாள்—உண்மை.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை யாரோ சில பேரை ஆட்சியில் அமர்த்தி விடுவது குடியரசு ஆகாது! நல்ல எதிர்க்கட்சியின் கண்காணிப்பில் ஆளுங்கட்சி இருப்பதுதான் குடியரசு!

குடியரசு நாள் கொண்டாடுகிறவர்கள் குடியரசுக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டாக வேண்டும்.

நெறித்த புருவத்தோடு...அழுத்திய கரத்தோடு அல்லவா அவர்கள் நம்மைப் பார்க்கிறார்கள்?

"எனக்குத் தெரியாதது இவனுக்கென்ன தெரியும்? இவன் சொல்லி நான் கேட்பதா?" என்பது குடியரசு ஆகாது

அந்தக் குடியரசு நாளில் எங்கள் அதிருப்தியை, கண்டனத்தை நாங்கள் தெரிவிக்கிறோம் அந்த நாளில் பொறுமை இல்லாமல்—பொறுப்புணர்ச்சி இல்லாமல் குடியாட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கையில்லாமல்— நீங்கள் குடியரசு நாள் கொண்டாடி என்ன பயன்?

பெரும்பாலோர் விரும்பாத இந்தியை அன்றைக்கு (1965 ஜனவரி 26) நீங்கள் சட்டப்படி ஆட்சி மொழியாக்குவதால் நாங்கள் எதிர்க்கிறோம்; தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு எதிர்க்கிறோம்.

—பேரறிஞர் அண்ணா 19 1 - 65ல் செம்பனார்கோவிலில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியது.

முப்பத்தெட்டிலே தாய்க்குலம் பாடிய பரணி

1938 இந்தி எதிர்ப்பின் போது பெரிய ஊர் வலம் ஒன்று தங்கசாலைத் தெருவிலிருந்து புறப்பட்டு சென்னை சைனா பஜார் வழியாகச் சென்றது.

அப்போது தமிழ்க்கொடி ஏந்தி டாக்டர் தருமாம்பாள் அவர்கள் இந்தப் பாடலைப் பாடிச் சென்றார்கள். மற்றும் அதே 1938 ல் இந்தி எதிர்ப்பு மகளிர் மாநாடு ஒன்று நடத்தினர். மாநாட்டு வரவேற்பாளராக வ.பா. தாமரைக் கண்ணி அம்மையார் அவர்களையும் மாநாட்டுத் தலைவர் திருவரங்கம் நீலாம்பிகை அம்மையாரையும் திறந்த குதிரை வண்டியில் (கோச்சு வண்டி) உட்கார வைத்து. சென்னை ஒற்றைவாடைக் கொட்டகைக்கு ஊர்வலம் சென்றது.

அப்பொழுது இப்பாடலைப் பாடிக்கொண்டு நூற்றுக் கணக்கான பெண்கள் உடன் சென்றார்கள். அந்த மகளிர் மாநாட்டில்தான் தந்தை பெரியார் அவர்களுக்குப் "பெரியார்" என்ற பட்டம் வழங்கப் பெற்றது. மூதாட்டிமூவலூர் இராமாமிர்தத்தம்மாள், தமிழ் ஆசிரியர் எஸ். எஸ். அருணகிரிநாதர் மனைவி, தருமாம்பாள் மருமகள், டாக்டர் சிற்சபை மனைவி சரஸ்வதி அம்மையார், பண்டிதை நாராயணி அம்மைடார், சுவாமி அருணகிரிநாதர், சாமி சண்முகானந்தா முதலியவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இந்தப் — பாடல் — மயிலை சிவ முத்து இயற்றி மணி அரசு மன்றத்தாரால் வெளியிடப்பட்டது.

தகவல்: சிறுவை நச்சினார்க்கினியன்

ஓடிப்போ ஓடிப்போ இந்தியே — உனை
ஓட்டத் துணிந்திடும் முந்தியே
நேற்றுப் பிறந்திட்ட பேதையே — பறை
சாற்று முன் ஓடுதல் நீதியே
வீரத் தமிழர்கள் அல்லவோ
எங்கள் வீரமும் தீரமும் சொல்லவோ
சேரன் செங்குட்டுவன் செய்கையே — இன்றும்
செப்புதல் கண்டோடி உய்வையே
எங்களை ஏய்த்திட எண்ணமோ — உனைக்
கங்கையில் தள்ளுதல் திண்ணமோ
வீரியம் பேசிடல் ஆகுமோ — உன்றன்
காரியம் இங்கே கைகூடுமோ
இந் புகுத்தும் உபாயமே — நம்
சொந்த மொழிக்கே அபாயமே
ஆ! ஆ! ஈதென்ன கொடுமையோ — நாங்கள்
.... அடிமையோ
அன்னிய பாஷையை ஓட்டுவோம் — எங்கள்
அன்னை மொழி நிலை நாட்டுவோம்
ஏணையில் எங்களை ஆட்டினாள் — இன்பத்
தேனையும் பாலையும் ஊட்டினாள்
முத்தம் அளித்து வளர்த்தவள் — அவள்
சித்தம் கலங்கித் தவிக்கிறாள்
செந்தமிழ் வாலிப வீரரே - ஓடி
வந்தே உதவுவீர் தீரரே.

புனித ராஜ்யம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பணமும் வாங்கிக்கிறேன்.

வேலன்: ரொம்ப பண்பான மனுஷர்!... உங்களுக்கு நன்றி சொல்றதை விட, உங்களை எங்களுக்கு 'போன் மூலமாகவே அறிமுகப்படுத்திவச்ச அந்தப் பாலம்மாளுக்குத்தான் நன்றி சொல்லணும்.

வக்கீல்: உங்களோட சுந்தரின்னு ஒரு பொண்ணு வந்துச்சே. அந்தப் பொண்ணு எங்கே காணும் — ஏ, அப்பா! ரொம்ப துடிச்சுப்போச்சு! என்ன மிஸ்டர் சுந்தரம்; உங்க வெவ்வரா?

(சுந்தரம் புன்னகை பூர்தல்)

வக்கீல்: வாழ்க உங்கள் காதல்! வெல்க உங்கள் காதல்! அந்தப் பெண் இங்கே இருந்தா உங்க ரெண்டு பேரையுமே சேர்த்து வாழ்த்தியிருப்பேன்!

வேலன்: அவுங்க — பாலம்மாள் வீட்டிலே தங்கியிருக்காங்க...

வக்கீல்: உம்! ஒண்ணு சொல்லமறந்துட்டேன் — அந்த பாலம்மா அவ்வளவு நல்ல பொம்பளையில்லே!...முன்னே ஏதோ ஒரு சொத்து வழக்கு சம்பந்தமா என் உதவியை நாடி வந்தாள்; அவ்வளவு தான்! ஆனா அவளைப் பற்றி நான் கேள்விப்பட்டது அப்படி பொண்ணும் நல்லா இல்லே. பச்சையாகச் சொல்றேனே: அந்த வீடு ஒரு விபச்சார விடுதின்னு எலலோரும் சொல்றாங்க நீங்க என்னை தப்பா நினைக்கக்கூடாது! நான் எதையும் மனசில் மறைக்கிற பழக்கமில்லே,

(சுந்தரமும், வேலனும் வியப்பும் திகைப்பும் அடைதல்— இருந்லும் சமாளித்துக் கொண்டு)

சுந்தரம்: நீங்க இந்த உண்மையைச் சொன்னதற்கு நன்றி — நாங்க இப்பவே போயி சுந்தரியை அங்கிருந்து அழைச்சிட்டு போயிடுறோம்;

வேலன்: என்னசார் அதிசயம்? அந்த வீடு முழுக்க ஒரே கடவுள் படமா மாட்டியிருக்கு.....

வக்கீல்: கடவுள் சாட்சியா அந்தக் காரியத்தை நடத்துறாங்க!

சுத்தரம்: சரிசார்! நாங்க அப்புறம் வந்து நம்ப வழக்கு விஷயமா பேசுறோம் .....

வக்கீல்: ஓக்கே! .... போய்ட்டு வாங்க!

(வக்கீல் வணக்கம் தெரிவிக்கிறார். சுந்தரமும் வேலனும் வணங்கிவிட்டுப் போகிறார்கள்)

(காட்சி முடிகிறது)

அணி அணியாய் வருவாய்!

-:கவிஞர், பொ, பூவண்ணன்:-

முறத்தாலடி யடித்தபுறம்
மறத்தி புலி துரத்தி
மடித்து உயிர் முடித்த பெரும்
முதுமைத் தமிழ்க் குலமே!
குறளாம் திருக் குறளைப்படி
குணமேவிய இனமே!
குதித்தேயெழு துடித்தே நடை
குகையி லெழும் புலியே!

தமிழே! நறுங் கனியே நனி
திருவே வரும் பகையைத்
தகர்த்தே விடு பொதிகைப் பெருந்
தகையே! தமிழ்க் கொடியே!
அமிழ்தே அருஞ் சுவையே! குளிர்
அருவி தரும் நடையே!
அருகில் வரும் பகையை நொடிப்
பொழுதிலடித் தெறிவாய்!

கலைஞர் வழி அறிஞர் வழி
கவிதை புனை தமிழா!
கழகவழி கடமைப்படி
கழகப்பணி புரிவாய்!
தலையாகிய கழகம்தனை
தழைத்திடுவாய் தமிழா!
தகுதிபெறும், தலைமைதனைத்
தலையாய்ப்பெறு தோழா!

அறிவகமே அருந்தமிழர்
அறிவுக்கடல் தெளிவாய்!
அடடா நட! எழடா எழு!
அழகுத் தமிழ் வளர்ப்பாய்!
அறிஞர்தரும் மறவர்குலம்
அரிமாப்படை அறிவாய்
அணிதேர்ப்படை யுடனே அணி
அணியாய் உடன் வருவாய்!

ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராடுவதில் முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிப்பதில் முன்னணி வீரராகத் திகழ்ந்து வந்தார்.

தொழிற்சங்கத் தலைவராகவும் வேகத்தோடு பணியாற்றிய ஜீவா தேசிய விடுதலை வீரராகவும் விளங்கி வந்தார்.

விடுதலைப் போராட்டங்களில் பலமுறை கலந்துகொண்டார். போலீஸ் அடக்குமுறைக்கும் ஆளானர்; சிறைக்கும் சென்றவர்தான் ஜீவா. பத்தாண்டு காலத்திற்கு மேல் சிறையிலேயே வீர வாழ்வைக் கழித்தவர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டளைக்கேற்ப தலைவராக விளங்கி வந்த ஜீவா பலநேரங்களில் தலைமறைவு வாழ்வினை மேற்கொண்டார் அப்போதெல்லாம் ஆளுங் கட்சித் தலைவர்களின் இல்லங்களில் கூட பாதுகாப்பில் இருந்திருக்கிருர்

காரணம் ஜீவா மற்ற அரசியல் கட்சித் தலைவர்களின் நண்பராகவும் அன்பைப் பெற்றவராகவும் விளங்கி வந்தாதுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் உற்ற நண்பர்களில் ஒருவராகவும் கருத்து வேறுபாடுகளுக்கிடையிலேயும் கலந்து வாழ்ந்து வந்திருக்கிருர்.

ஜீவா — தோற்றத்தில் ஜோசப் ஸ்டாலினை ஒத்திருந்தார். அவரது மீசையும் முகப்பொலிவும் மார்க்சிம் கார்க்கியையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தன.

வீரம் மிகுந்த தொழிற்சங்கத் தலைவராக, சீரியபேச்சாளராகத் திகழ்ந்த ஜீவா கவிஞராகவும் விளங்கினர்.

'பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாயழுவாள்
வேலையின்றி நாம்
அழுவோம் - தோழனே
வீடுமுச்சூடும் அழும்' —

உணர்ச்சிமிக்க இந்தப் பாடல் ஏழை மக்களின், பாட்டாளித்தோழனின் கண்ணீர் சிந்தும் வாழ்க்கையை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டி நியாயம் கேட்கிறது.

இன்றளவும் அந்தக்கவிதை உயிரோடு உலவி வருகிறதே! இன்றைய நாட்டு மக்களின் நிலைமையும் அதுவாகத்தானே இருந்து கொண்டு வருகிறது. நாடு விடுதலை அடைந்து முப்பது ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆனல் வறுமைக்கும் வேலையில்லாமைக்கும் முடிவு ஏற்படவில்லை. இன்று ஜீவா உயிரோடிருந்தால் எண்ணிக் கண்ணீர் உகுத்திருப்பார்.

ஜீவன் சிலிர்க்கவைத்த ஜீவா!

'ஜீவா'...அது ஒரு ஜீவனுள்ள கவர்ச்சிச் சொல்.

மக்களைக் கவர்ந்த மனிதர் அவர். முகத்தைக் காட்டியோ நடிப்பைக் காட்டியோ மக்களைக் கவர்ந்த கவர்ச்சி அல்ல அது. தனது ஓயாத உழைப்பாலும், தியாகத்தாலும் தன்னலமற்ற தொண்டாலும், மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர் மரியாதையையும், அன்பையும் பெற்றவர்.

தமிழ் மண்ணில் நாற்பதாண்டுக் காலம் பம்பரம் போல் சுழன்று, சுழன்று சுயமரியாதைக் கருத்துக்களை பொதுவுடமைத் தத்துவங்களை மேடைதோறும் முழங்கி வந்தவர்.

பகுத்தறிவுக் கொள்கையினை நாடெங்கும் பரப்பியவர். பகுத்தறிவு பரவிய உள்ளத்தில்தான், பொதுவுடமைக் கொள்கை பூத்துக் குலுங்கும் என உறுதியாக நம்பியவர்; செயல்பட்டவர். நல்ல நாத்திகனுகவே நாளெல்லாம் வாழ்ந்து காட்டியவர்.

அவர் ஒரு சிறந்த பேச்சாளர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய். கேளாரும் வேட்ப மொழிகின்ற சொல்லாற்றல் படைத்தவராக விளங்கியவர். அவரது உணர்ச்சிமிக்க பேச்சு இளைஞர்களையும் ஈர்த்தது.

ஜீவா—இணையற்ற எழுத்தாளராகத்திகழ்ந்தார். இலக்கியஅறிவும் அவரது எழுத்தில் பளிச்சிடும். 'ஜனசக்தி' அரசியல் இதழைத் தொடங்கினர். ஆசிரியர் பொறுப்பேற்று கொள்கை ஏடாக அதைக் கொண்டு வந்தார். அது கிழமைதோறும் தவருது கொள்கைகளை ஏந்தி வந்தது.

லெனின்

அவரது எழுத்து எவரையும் படிக்கத் தூண்டும். படிப்போர் எவரையும் அவரது கருத்தினை ஏற்கச் செய்திடும்

அரசியல் கருத்தினை மட்டுமின்றி இலக்கியத் தேனையும் மக்களுக்கு அளித்து இன்பங் கண்டார்.

'தாமரை' என்னும் திங்கள் இதழ் ஒன்றைத் தொடங்கினர். தமிழ் இலக்கியம் மட்டுமின்றி, உலக இலக்கியங்களையும் தமிழகத்திற்கு அளிப்பதில் முனைந்து ஆர்வங் காட்டி வந்தார்.

தொழிலாளர்களின். விவசாயிகளின் வேதனைகளைக் களைந்திட அவர்களுடைய உரிமைகளைப் பெற்றிட தொழிற்சங்கங்களை அமைத்துக் கட்டிக்காத்துப் போராடி வந்தார்.

ஜனவரி—18 ஜீவாவின் நினைவுநாள்! அவர் மறைந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

ஆனல் ஜீவாவின் இலட்சியங்கள் மறையவில்லை.

சுயமரியாதை, பகுத்தறிவு பொதுவுடைமை இவையே அவரதுஇலட்சியங்கள். இவை மறையாது. இவற்றை மறக்காமல் காப்போம்.

நம் ஜீவன் சிலிர்க்கவைத்த ஜீவாவை நினைந்து சிந்தை கூர்வோம்!

★ பொங்கித்தான் தீரவேண்டும்! ★

-:புலவர் பொன்னியின் செல்வன்:-

பொங்கித்தான் தீரவேண்டும்!— நாம்
பொங்கித்தான் தீரவேண்டும்!
குட்டக் குட்டக் குனிந்து கொடுத்து!
சொட்டச் சொட்டக் குருதி வழித்து!
வட்ட வட்ட வடுக்களைத் தாங்கி;
ஒட்ட ஒட்டப் பிழிந்தது போதும்! — இனி [பொங்கி]

நித்தம் நித்தம் உடலைத் தேய்த்து!
புத்தம் புத்தம் பூநகர் ஆக்கி;
சித்தம் கலங்கி, நித்தம் செத்து!
பித்தம் பிடித்துப் புரண்டது போதும்! —இனி [பொங்கி]

மெத்தை வித்தையில் மோதினி மாய்த்தும்;
கத்தைக் கத்தையாய் கணக்குகள் ஏய்த்தும்!
இத்தரை அழிக்கும் எத்தரைப் போற்றிச்
செத்தை எனநாம் சிதறல் போதும்! —இனி [பொங்கி]

பட்டுத் தமிழ்மொழி கெட்டுச் சாய்ந்திட!
துட்டுகள் மேல்வரும் துடுக்கு இந்தியைக்
கட்டுப் படுத்திடக் கண்டனம் எழுப்பியும்!
சுட்டுச் சுட்டுச் சொன்னது போதும்! —இனி [பொங்கி]

சோற்றுத் துருத்தியாய் தோளால் மூடிய!
காற்று மெய்யைக் காத்தென் கண்டோம்?
ஆற்று நீர்போல் அலைகடல் காணும்,
வேற்றூர் பயணம் விரைந்திடும் முன்நாம் —இனி [பொங்கி]

லைன் ஆப்டோன் மற்றும் கலர் பிளாக்குகள்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
தயாரிக்கும் இடம்

சாமுண்டீஸ்வரி பிராசஸ்
14, மகாலட்சுமி தெரு சென்னை-600017
தொலைபேசி எண்; 440433

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது.
நிர்வாக அலுவலகம். 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை—600018
தொலைபேசி: 441009